


VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய,நகரப்பதிப்பு




மலர் : 92 இதழ்: 95 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (26.11.2021) ஹிஜ்ரி 1443 ர.ஆகிர் 20 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

### சுதந்திர கட்சி - பொதுஜன முன்னணி முரண்பாடு

# சபையில் வெடித்தது சர்ச்சை

## இனியும் எம்மை சீண்டினால் நடப்பதே வேறு; அரசாங்கத்தை எச்சரித்தார் மைத்திரி

### வாதிட முடியாது ஆளுந்தரப்பு திக்குமுக்காடியது



(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் நீண்டகாலமாக புகைந்துகொண்டிருந்த முரண்பாடுகள் நேற்று சபையில் பாரிய சர்ச்சையாக வெடித்தன.

தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை சீண்டிக்கொண்டிருந்தால் 9

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து

### வாசகத்துடன் சபைக்கு வந்த பிரதான எதிர்க்கட்சி

(ஆர்.யசி.,எம்.ஆர்.எம்.வசீம்)



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் தினத்தைஅடிப்படையாகக்கொண்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து என்ற வாசகம் பொறித்த 9

## மைத்திரியின் கோபம் நியாயமானதாம்

### மஹிந்தானந்தவுடன் சமரச பேச்சில் நிமல், பிரசன்ன

(சபை நிருபர்கள்)

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் சபையில் 10



ஐ.நா.வின் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் காலித் கியாரி மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக்குழுவினர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கொழும்பில் சந்தித்தபோது....

## அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எமது கையில்

### சபையில் மைத்திரிபால சிறிசேன

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

அரசாங்கம் மூன்றில் இரண்டை தக்கவைக்கவும் அரசாங்கத்தை கொண்டு நடத்தும் வேளையிலும் புத்திசாலித்தனமாக, ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும். இந்த அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கையில் தான் உள்ளது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ளுங்கள் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான 9

## சிறுபான்மை மக்களுக்கு நெருக்கடிகளை கொடுத்தால் சர்வதேச நிதி கிடைக்காது

### பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தால் ஆதரவளிக்க தயார் என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

(ஆர்.யசி.,எம்.ஆர்.எம்.வசீம்)

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடருமானால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எமக்கு எதிரான பிரேரணைக்கு பதில் சொல்ல முடியாத நிலை ஏற்படும். சிறுபான்மை சமூகங்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் 10




## இந்தியாவை நிரந்தர எதிரியாக கருதும் கொள்கையில் அரசு

### மாற்றம் ஏற்பட வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

இலங்கையில் பௌத்த சிங்கள பேரினவாத ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்ள தமிழர்களை பிரதான எதிரிகளாக மாற்றியதுடன், தமிழர்களுடன் நெருக்கமான இந்தியாவையும் தமது நிரந்தர எதிரியாக கருதும் கொள்கையிலேயே இலங்கை தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் தெரிவித்தார்.

இந்த வலயத்தில் 10

### இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த

## 120000 சாட்சியங்கள் எவ்வாறு திரட்டப்பட்டன ?

### வெளிவிவகார அமைச்சர் சபையில் கேள்வி



(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் ஆணையாளரையும் நாம் அங்கீகரிக்கின்றோம். ஆனால் இலங்கைக்கு எதிராக சாட்சியங்களை திரட்டி சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் இலங்கையை கொண்டு நிறுத்தும் விசேட பொறிமுறையை 9

## நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் 'ஓரேஞ் த வேல்ட்' பிரசாரம்




(நா.தனுஜா)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அவற்றை முடிவுக்குக்கொண்டு வருவதையும் இலக்காகக்கொண்டு இலங்கையிலுள்ள 11

## ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவையே தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டும்

### தண்டனை வழங்கலாம் என்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

(எம்.மனோசித்ரா)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு எதிராக பாராளுமன்ற சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை 10

### கிண்ணியாவில் 6 பேரின் உயிரை பறித்த படகுப்பாதை விபத்து :

## கிண்ணியா நகரசபை தலைவர் கைதானார்

( எம்.எப்.எம்.பஸீர்)

திருகோணமலை – கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்த படகுப்பாதை விபத்து தொடர்பில் கிண்ணியா நகரசபை தலைவர் எஸ்.எச்.எம்.நளீம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். 8



# இலங்கைப் பொலிஸாருக்கான பயிற்சி ஒப்பந்தத்தை புதுப்பிக்கப்போவதில்லை

## கரிசனைக்குரிய மனித உரிமைகள் நிலைவரத்தைக் காரணங்காட்டி ஸ்கொட்லாந்து பொலிஸ் அதிரடி அறிவிப்பு

(நா.தனுஜா)

இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்குவரவுள்ள நிலையில், இலங்கையின் கரிசனைக்குரிய மனித உரிமைகள் நிலைவரத்தின் காரணமாக அவ்வொப்பந்தத்தை மீளப்புதுப்பிக்கப்போவதில்லை என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவித்துள்ளது.

ஸ்கொட்லாந்து பொலிஸாரினால் இலங்கை பொலிஸாருக்குப் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்குவரவுள்ள நிலையில், அவ்வொப்பந்தம் மீளப்புதுப்பிக்கப்படக்கூடாது என்று ஸ்கொட்லாந்து மற்றும் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் சர்வதேச சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களாலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஸ்கொட்லாந்து பொலிஸின் தலைமை கான்ஸ்டபிள் லெய்ன் லிவிங்ஸ்றன் மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது: எம்மால் இலங்கைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுவந்த பயிற்சி கடந்த 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இடைநிறுத்தப்பட்டது. இலங்கையில் போர் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டில் அந்நாட்டுப் பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக எமது பொலிஸார் அங்கு சென்றனர். இந்நிலையில் இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் நிலைவரத்தை உரியவாறு பிரதிபலிக்கக்கூடியவாறு பாதுகாப்பு மற்றும் நீதித்துறைசார் வெளிநாட்டு உதவி தொடர்பில் மதிப்பீடொன்றை மேற்கொள்ளவேண்டியிருந்தமையால் 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தின் பின்னர் ஸ்கொட்லாந்து பொலிஸார் பயிற்சி வழங்கலுக்காக இலங்கைக்குச் செல்லவில்லை.

இலங்கைக்கான பாதுகாப்பு மற்றும் நீதித்துறைசார் வெளிநாட்டு உதவி தொடர்பான மதிப்பீட்டுப்பணிகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகையினால் ஒப்பந்தத்தின்படி ஏற்கனவே பயிற்சி வழங்குவதற்கு இணங்கிய 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கைப்பொலிஸாருக்குப் பயிற்சி வழங்குவதற்காக ஸ்கொட்லாந்து பொலிஸார் இலங்கைக்கு அனுப்பப்படமாட்டார்கள். அதற்கு மேலதிகமாக இலங்கைப்பொலிஸாருக்குப் பயிற்சி வழங்குவதற்கான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்குமாறு கோரப்போவதில்லை என்று இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றோம்.

உலகளாவிய ரீதியில் பொலிஸ்சேவையை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்குரிய கடப்பாட்டை நாங்கள் கொண்டிருக்கின்றோம். அதன் மூலம் மனித உரிமைகளை வலுப்படுத்துவதுடன் பொலிஸ்சேவையின் கௌரவத்தையும் நியாயாதிக்கத்தையும் மேம்படுத்தமுடியும். ஸ்கொட்லாந்திலும் சர்வதேச ரீதியிலும் நாங்கள் வழங்குகின்ற அனைத்து சேவைகளின்போதும் அதனை மனதிலிருத்திச்செயற்படுவோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப்பொலிஸாருக்குப் பயிற்சிகளை வழங்கும் ஸ்கொட்லாந்து பொலிஸாரின் வகிபாகமானது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அரசியல் ரீதியில் மூடிமறைப்பதற்கான திரையாக அமைகின்றது. ஆகவே இப்பயிற்சி வழங்கல் தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவிற்கு வரவுள்ள நிலையில், அவ்வொப் பந்தத்தை மீளப்புதுப்பிக்காமல் முடிவிற்குக் கொண்டுவருவதற்கு ஏற்றவகையிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பிரித்தானிய மற்றும் ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் இணைந்து இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்ட னுக்கு இம்மாத ஆரம்பத்தில் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொட்டாவ வீடொன்றில் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு

## இம்மாதத்தில் மாத்திரம் நான்கு சம்பவங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

பன்னிப்பிட்டிய கொட்டாவ வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வெடிப்பு சம்பவமொன்று பதிவாகியுள்ளது. இதற்கான காரணம் சமையல் எரிவாயு கசிவாக காணப்படலாம் என்று கொட்டாவ பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். வெடிப்பு சம்பவத்தின் காரணமாக வீட்டின் சமையலறை முற்றாக சேதமைடைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் குறித்த வீட்டிலிருந்த எவருக்கும் இதனால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4 மணியளவில் பலத்த சத்தம் கேட்டது. நாங்கள் உடனடியாக வெளியே செல்ல விரும்பாததால், சில நிமிடங்கள் கழித்து எங்கள் அறைக் கதவைத் திறந்தோம். அறையை திறந்து பார்த்த போது கூரையின் துண்டுகள் தரையில் சிதறிக் கிடந்தன. சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்தமையின் காரணமாகவே குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாக சந்தேகிக்கின்றோம். வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் அந்த பகுதியில் யாரும் இல்லாதிருந்தமை மகிழ்ச்சிக்குரியது என்று குறித்த வீட்டிலிருந்த பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதத்தில் மாத்திரம் இதனுடன் சேர்த்து 4 எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த 4 ஆம் திகதி வெலிகம கப்பரதொட்ட பகுதியிலுள்ள உணவகமொன்றில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

இதேபோன்று கடந்த 16 ஆம் திகதி இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றது. பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சமையல் எரிவாயு கசிவே இதற்கான காரணம் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த வாரம் (20 ஆம் திகதி) கொழும்பிலுள்ள குதிரைப்பந்தயதிடலின் பார்வையாளர் கூடத்திற்கருகிலிருந்த உணவகத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளானதோடு, இந்த வெடிப்பு சம்பவத்திற்கும் சமையல் எரிவாயு கசிவே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

வீடுகளில் பாவிக்கும் சமையல் எரிவாயு சிலிண்டரில் காணப்படும் அளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் அவை வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர், அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், எனினும் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தாமையினால் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து உயிரிழப்புக்கள் ஏற்படக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் சமையல் எரிவாயு சிலிண்டர் தொடர்பில் இவ்வாறு வெளியிடப்படும் கருத்துக்களை லிட்ரோ நிறுவனம் மறுத்துள்ளது. இது பொது மக்களை வீண் அச்சத்திற்கு உள்ளாக்கும் செயற்பாடு என்பதோடு, அரசாங்கத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கும் செயலாகும் என்று லிட்ரோ நிறுவனத்தின் வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஜனக பத்திரண தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். சமையல் எரிவாயுவை உபயோகிக்கும் போது வழமையாக பின்பற்றுகின்ற பாதுகாப்பு நடைமுறைகளை தொடர்ந்தும் பேணுவது அத்தியாவசியமானதாகும்.

# எம்.பி. பதவியை துறந்தார் சமரசிங்க

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

ஆளுந்தரப்பு பராராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

2021, நவம்பர் 25ஆம் திகதி முதல் அதாவது நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமா செய்திருப்பதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64 (1)ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு இது பற்றி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கையை ஏற்று எதிர்வரும் 29 ஆம் திகதி அமெரிக்காவுக்கு புறப்படுவதாக கூறியிருந்த மஹிந்த சமரசிங்க, அதற்கமைய தான் பாராளுமன்ற பதவியை இராஜினாமா செய்வதாக கூறியிருந்தார்.

பொருளாதார ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் உறவை பலப்படுத்த வேண்டும். அதற்கான பணிகளை ஆற்றவே நான் அங்கு பயணிக்கின்றேன் எனவும் அவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் சபையில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் நேற்று புதுடில்லியில் இந்திய லோக்சபாவின் சபாநாயகர் தலைமையிலான குழுவினரை சந்தித்தபோது...

# இலங்கையில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலுள்ளது

## ஐ.நா. உதவி பொதுச் செயலருடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

(எம்.மனோசித்ரா)

இலங்கையில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் காணப்படுகிறது. ஒரு முஸ்லிம் பிரஜை நீதித்துறை அமைச்சராகவும், தமிழர் ஒருவர் சட்டமா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரம், சமாதானத்தை கட்டியெழுப்பல் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் காலிட் கியாரியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது கருத்து வெளியிட்ட உதவி பொதுச் செயலாளர் காலிட் கியாரி, ஐக்கிய நாடுகள் சபை அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கையுடன் இணைந்து செயற்படும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுற்றுச்சூழல் மீதான அன்பு மற்றும் அக்கறை குறித்து திருப்தி தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், நுண் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பைப் பாராட்டினார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மூலம் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி விளக்கினார்.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமை, ஏனைய சவால்களை எதிர்கொள்வதற்கு ஐ.நா. கொவெக்ஸ் வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.



இனங்களுக்கு இடையேயான ஒற்றுமை மற்றும் உறவுகள் குறித்து இரு தரப்பும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். அனைத்து இனங்களுக்கும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் இலங்கையில் காணப்படுகிறது. நீதித்துறை அமைச்சர் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவராவார். அதே போன்று சட்டமா அதிபர் ஒரு தமிழர் ஆவார். இதுபோன்ற வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த பலர் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர் என ஜனாதிபதி குறிப்பிட்டார். இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு கல்வி மிக முக்கியத்துவமுடையது என்பது இரு தரப்பினரதும் நிலைப்பாடாகக் காணப்பட்டது.

# 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் மூன்றாவதாக பைசர் தடுப்பூசி

## சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல

(எம்.மனோசித்ரா)

நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் சில தினங்களுக்குள் அதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்தோடு திருமணங்கள், திரையரங்குகள், உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் ஏனைய வைபவங்கள் உள்ளிட்டவற்றை சுகாதார விதிமுறைகளுக்கமைய வழமையைப் போன்று முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

தற்போது 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் மாத்திரமே 60 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளில் 65 வயதுக்கு மேற்பட்டோருக்கே வழங்கப்படுகின்றன.

இதுவரையில் சுகாதார துறையினர் உள்ளிட்ட அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற முன்னிலை குழுவினரில் 380213 பேருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் முழு சனத்தொகையில் 73 சதவீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்குள் 75 சதவீதத்தினை பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது நாட்டு மக்களுக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த வெற்றியாகும். இதே போன்று பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட இலக்கினை அடைவதற்கு மேலும் 2 இலட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு திருமணங்கள், திரையரங்குகள், உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் ஏனைய வைபவங்கள் உள்ளிட்டவற்றை சுகாதார விதிமுறைகளுக்கமைய வழமையைப் போன்று முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 25 அல்லது 50 சதவீதமானோருக்கே வழங்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து, திறக்கப்படும் துறைகளுக்கு அனுமதி வழங்கப்படும் வரையறை குறித்து தீர்மானிக்கப்படும். எந்த துறைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் முகக்கவசம் அணிதல், முழுமையாக தடுப்பூசி வழங்கப்பட்டிருத்தல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பன நிச்சயம் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையினரின்

# பணிப்பகிஷ்கரிப்பினால் நோயாளர்கள் அசௌகரியம்

(எம்.மனோசித்ரா)

நாடளாவிய ரீதியில் சுகாதார துறையினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு, கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் கவனயீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்தனர்.

சேவை தரத்தை உறுதிப்படுத்தப்படுத்தல், சம்பள முரண்பாடு, பதவி உயர்வு மற்றும் மேலதிக கொடுப்பனவை அதிகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இவ்வாறு பணிப்பகிஷ்கரிப்பும் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

தாதியர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் பங்கேற்றன. வைத்தியசாலைகள் பலவற்றிலும் முன்னெடுக்கப்பட்ட இந்த பணிப்பகிஷ்கரிப்பின் காரணமாக நோயாளர்களும் பொது மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# சுபயோகம்

**26.11.2021 பிலவ வருடம் கார்த்திகை மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

கிருஷ்ண பட்ச ஸப்தமி திதி பின்னிரவு 1.12 வரை. அதன்மேல் அஷ்டமி திதி. ஆயில்யம் நட்சத்திரம் மாலை 5.09 வரை. பின்னர் மகம் நட்சத்திரம். சிரார்த்த திதி தேய்பிறை ஸப்தமி. மரணயோகம் முழுவதும். கரிநாள் சுபம் விலக்குக. கீழ் நோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் உத்திராடம், திருவோணம். சுபநேரங்கள் காலை 9.30 – 10.30, மாலை 4.30 – 5.30, ராகுகாலம் 10.30 – 12.00, எமகண்டம் 3.00 – 4.30, குளிகை காலம் 7.30 –9.00, வாரசூலம் மேற்கு, பரிகாரம் வெல்லம்.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சந் |
| குரு | தினசரி கிரகநிலை<br>கார்த்திகை 10 வெள்ளி<br>மாலை 5.09<br>சிம்ம சந்திரன் | | |
| சனி | | | |
| சுக் | சூரி, புத, கேது | செவ் | |

மேடம் – கீர்த்தி, புகழ்
இடபம் – உண்மை, உயர்வு
மிதுனம் – தனம், இலாபம்
கடகம் – பயணம், அலைச்சல்
சிம்மம் – நட்பு, உதவி
கன்னி – கவனம், அவதானம்
துலாம் – காரியசித்தி, அனுகூலம்
விருச்சிகம் – செலவு, பற்றாக்குறை
தனுசு – அன்பு, இரக்கம்
மகரம் – கவனம், எச்சரிக்கை
கும்பம் – அசதி, வருத்தம்
மீனம் – யோகம், அதிர்ஷ்டம்

இன்று ஆயில்யம் நட்சத்திரம். ஆதிசேஷன் என்னும் சர்ப்ப ராஜன் இந்நட்சத்திர தேவதையாவார்.

சனி, சுக்கிரன் கிரகங்களின் ஆதிக்க நாளின்று.

அதிர்ஷ்ட எண் – 6
பொருந்தா எண்கள் – 8, 3
அதிர்ஷ்ட வர்ணங்கள் – நீலம், பச்சை

**இராமரத்தினம் ஜோதி**
**(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)**



கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் படகுப் பாதை விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் ஜனாஸா வீடுகளுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த போது.....

# உள்ளடக்க அளவு மாற்றங்களே சிலிண்டர்கள் வெடிக்க காரணம்

## பரிசோதனை அறிக்கையை நாட்டிற்கு வெளிப்படுத்த ஐ.தே.க வலியுறுத்தல்

(எம்.மனோசித்ரா)

சமையல் எரிவாயு சிலிண்டர்களின் உள்ளடக்கங்களின் அளவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றமே அவை வெடிப்பதற்கான பிரதான காரணமாகும். எனவே இது தொடர்பில் துறைசார் நிபுணர்களைக் கொண்டு விசேட பரிசோதனைகளை முன்னெடுத்து, அதன் அறிக்கையை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு மக்களின் உயிரை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் சமையல் எரிவாயு நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இது தொடர்பில் ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நாட்டு மக்களுக்கு தேவையான சமையல் எரிவாயுவினை வழங்குவதில் அரசாங்கம் ஆரம்பத்திலேயே தோல்வியடைந்தது. எனினும் தற்போது அரசாங்கமானது வெடிக்கக் கூடிய சமையல் எரிவாயு சிலிண்டர்களை அல்லது எரிவாயு வெடி குண்டுகளை மக்களுக்கு விநியோகித்துக்கொண்டிருக்கிறது.

இதுவரையில் கொழும்பு, கண்டி, வெலிகம, கொட்டாவ மற்றும் ஹோகந்த என பல்வேறு பகுதிகளிலும் சமையல் எரிவாயு கசிவினால் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தற்போது சமையல் எரிவாயுவினால் நுகர்வோரின் உயிர் மிகுந்த அபாயத்தில் உள்ளது. இதற்கான காரணம், சமையல் எரிவாயுவின் உள்ளடக்கங்களின் அளவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் ஆகும். நுகர்வோரான பொதுமக்களின் உயிர் இவ்வாறான வெடிப்பு சம்பவங்களால் அச்சுறுத்தலுக்குள்ளாவதற்கு இடமளிக்காமல், இது தொடர்பில் துறைசார் நிபுணர்களைக் கொண்டு விசேட பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதுமாத்திரமின்றி குறித்த பரிசோதனை அறிக்கைகளை எவ்வித ஒழிவு மறைவுமின்றி நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். மேலும் சமையல் எரிவாயு விடயத்தில் மக்களின் உயிரை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# மக்களின் கவனயீனமே எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்க காரணம்

## லாப் எரிவாயு நிறுவனம் விளக்கம்

(இராஜதுரை ஹஷான்)

எல்.பி.சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிக்கும் வெடி குண்டு என குறிப்பிடப்படும் செய்தி அடிப்படையற்றதாகும். சிலிண்டர் சுயமாக வெடித்ததன் காரணமாக விபத்துக்கள் இடம்பெற்றதாக இலங்கை வரலாற்றில் எச்சம்பவங்களும் பதிவாகவில்லை. சிலிண்டரை தவறான முறையில் பயன்படுத்தல், நுகர்வோரின் கவனயீனம், தரமற்ற மேலதிக இணைப்புக்கள் ஆகியவற்றின் காரணமாக சிலிண்டர் வெடித்து விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. ஆகவே எல்.பி நிறுவனம் தரமற்ற சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகித்துள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை தர நிர்ணய நிறுவனம், ஏனைய பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என லாப் எரிவாயு நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எல்.பி சமையல் எரிவாயுவின் தரம் நாட்டிற்கு எரிவாயு இறக்குமதி செய்யும் நிறுவனங்களினால் உருவாக்கப்பட்ட நிர்ணயங்களுக்கு அமைய மற்றும் இலங்கை தர நிறுவனத்தின் தரப்படுத்தலுக்கு அமைய எல்.பி சமையல் எரிவாயுவின் தரம் உறுதிப்படுத்தப்படுகிறது. தரமற்ற எரிவாயு சிலிண்டர்களை எல்.பி நிறுவனம் சந்தைக்கு விநியோகிக்கவில்லை. ஒரு சில பகுதிகளில் சமையல் எரிவாயு வெடிப்பு சம்பவம் பதிவானதைத் தொடர்ந்து வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை.

இலங்கை வெப்ப வலய நாடாக காணப்படுவதால் எல்.எல்.பி எரிவாயு சிலிண்டரின் வாயு கலவையின் மொத்த தரம் 30 தொடக்கம் 70 சதவீதமாக காணப்படுகிறது. குளிர் பிரதேச நாடுகளில் எரிவாயு சிலிண்டர்களில் நூற்றுக்கு நூறு வீதம் புரோபென் பயன்படுத்தப்படுகிறது. இலங்கையில் பாவிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களில் பியூட்டேன் மற்றும் புரோபென் 30, 70 அளவு காணப்படுகிறது. இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் தரப்படுத்தலுக்கு முரணாக எல்.பி எரிவாயு சிலிண்டரின் தரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை. அவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பது இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினதும், ஏனைய நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

எல்.பி சமையல் எரிவாயு சிலிண்டருடன் தொடர்புடைய விபத்துகள் எரிவாயு சிலிண்டர் சுயமாகவே வெடித்ததன் காரணமாக இடம்பெற்றுள்ளது என ஊடகங்கள் வாயிலாக குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. இலங்கை வரலாற்றில் எல்.பி. எரிவாயு சிலிண்டர் சுயமாக வெடித்ததன் காரணமாக விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என இதுவரையில் எச்சம்பவங்களும் பதிவாகவில்லை. நுகர்வோர் எல்.பி.எரிவாயு சிலிண்டர்களை தவறான முறையில் பயன்படுத்தும் போதும் தரமற்ற ஏனைய இணைப்புக்களை சிலிண்டருடன் ஒன்றிணைக்கும் போதும் வெடிப்பு சம்பவங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

சமையல் எரிவாயு என்பது வெடிக்கும் குண்டு என ஒரு சில தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்து தவறான நிலைப்பாடாகும். சிலிண்டர் பாவனைக்கான போதுமான தெளிவினமை, தரமற்ற இணைப்புக்கள் பயன்பாடு ஆகியவற்றின் காரணமாகவே சிலிண்டர் வெடித்துள்ளது என்பது அரச மற்றும் நிறுவன மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தவறான பிரசாரங்கள் தொடர்பில் நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டாம். சமையல் எரிவாயு தொடர்பில் சந்தேகங்கள் காணப்படுமாயினும், எரிவாயு சிலிண்டர் பயன்பாட்டில் சிக்கல் நிலை காணப்படுமாயின் நுகர்வோர் அவற்றை நிவர்த்தி செய்துகொள்வது அவசியமாகும். என குறிப்பிடப்பட்டுள்ளது.


## வாகனங்கள் விற்பனைக்கு

பதிவு செய்யப்பட்ட வாகனங்கள்

| | | |
|---|---|---|
| **4 சக்கர ட்ரக்டர் / ட்ரக்டர்கள்** | | |
| SP RF-XXXX | MF MF1552 2955.00 CC | 2018 |
| UP RG-XXXX | TAFE 45DI 4WD 2500.00cc | 2019 |
| EP RC-XXXX | மைந்திரா 575 DI 2730.00 CC | 2011 |
| **முச்சக்கரவண்டி** | | |
| UP ABP-XXXX | பியாஜியோ APE 395.00CC | 2016 |
| UP YI-XXXX | பியாஜியோ APE 395.00CC | 2010 |
| UP YI-XXXX | பஜாஜ் RE205 198.00CC | 2011 |
| UP QZ-XXXX | பஜாஜ் AR4S 173.50CC | 2010 |
| **ஹாவஸ்டர்** | | |
| CBM90XXXX | YANMAR AW82 82HP | 2018 |
| C8A-97XXXX | YANMAR AW82GV 82HP | 2017 |
| CBM-90XXXX | YANMAR AW82 82HP | 2017 |
| AG17XXXX | DA-NXIA SUPER 2200 | 2018 |

மு.ப 8.30 மணியிலிருந்து பி.ப 5.00 மணி வரை வாகனங்களை பார்வையிடலாம்

சனத் - 077-4727460, குட்லி - 077-4139675, அன்ஜுல - 076-9014010

C/193, உஹன வீதி, அம்பாறை

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் வாகன விற்பனை சாலை

கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பிஎல்சி





## இன்றைய சிந்தனை

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல்**

(திருக்குறள்)

**தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.**

VIRAKESARI
வீரகேசரி
2021 நவம்பர் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா–எல. Tel. : 011 7322750, 011 7322751, 011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

# இரசாயன உரம் குறித்த புதிய தீர்மானம்

நாட்டில் விவசாயம் மற்றும் பயிர் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டு வந்த இரசாயன உரத்தை தடைசெய்து சேதனப்பசளையைபயன்படுத்துவதுதொடர்பானஅரசாங்கத்தின் தீர்மானம் தொடர்ந்து வருகின்ற நிலையில் தற்போது தனியார் துறையினர் இரசாயன உரத்தைக் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்காக இரசாயன உரத்தை தடை செய்து கடந்த ஏப்ரல் மாதம் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தற்போது மீள்பெறப்பட்டுள்ளது. அந்தவகையில் தற்போது தனியார் துறையினர் இரசாயன உரத்தை இறக்குமதி செய்து தேவையானவர்களுக்கு வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கின்ற விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. நாட்டில் தற்போது காணப்படுகின்ற உரத்தட்டுப்பாட்டினை கருத்திற் கொண்டு தனியார் துறையினருக்கு இரசாயன உரத்தினை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். அதற்கமைய இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பசுமை விவசாயத்தினை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இரசாயன உர இறக்குமதியை தடை செய்து கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்த தீர்மானத்தில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும் சேதன உரத்தினைப் பயன்படுத்தி 6 இலட்சத்து 50000 ஹெக்டயரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் மக்களின் நலனுக்கு முக்கியத்துவமளிக்கும் அரசாங்கம் என்ற ரீதியில் இரசாயன உர இறக்குமதிக்கான தடை நீக்கி அதுகுறித்த வர்த்தமானி அறிவித்தலையும் ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதால் அரசாங்கத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரசாயன உரம் இறக்குமதி செய்யப்படமாட்டாது. இரசாயன உரத்தினை உபயோகிப்பவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உர தட்டுப்பாடு மாத்திரமின்றி அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக நெல் மற்றும் மரக்கறி உள்ளிட்ட பல பயிர்ச்செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தமது விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் நஷ்டமடைந்துள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் உரிய நஷ்ட ஈடு வழங்கப்படும். உரத்தட்டுப்பாடு ஏற்பட்டமையின் காரணமாக பிரபாகரன் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை விடவும் எனக்கு எதிராக எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. அரசாங்கத்திலுள்ளவர்கள் கூட இந்த தீர்மானத்திற்கு ஆதவளிக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறிருப்பினும் அரசாங்கத்தின் பசுமை விவசாய கொள்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது என்றும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியிருந்தார்.

அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் இந்த தீர்மானத்தை எடுத்ததிலிருந்து எதிர்ப்புகள் பல தரப்பிலிருந்தும் வந்துகொண்டிருந்தன. விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுவது போன்று அரசாங்கத்துக்கு உள்ளேயே இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டு வந்தது. எதிர்க்கட்சியினரும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வந்தனர். அதேபோன்று விவசாயிகளும் தினந்தோறும் பல்வேறு இடங்களில் இதற்கு எதிராக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். இந்தச் சூழலிலேயே எந்த வகையிலாவது இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் இதிலிருந்து பின்வாங்க மாட்டோம் என்றும் அரசாங்கம் தெரிவித்து வந்தது. ஆனால் தற்போது பயிர்ச்செய்கைகள், மரக்கறி வகைகள், தேயிலை, இறப்பர் உற்பத்தி போன்றவையும் இந்த இரசாயன உரம் இன்மையின் காரணமாக பாதிக்கப்படலாம் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இது இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. காரணம் தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி குறையுமாயின் இலங்கைக்கான அந்நிய செலாவணி வருமானம் குறையும். ஏற்கனவே இலங்கை டொலர் நெருக்கடியால் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. எனவே இந்த சூழலில் விவசாய உற்பத்தியும் குறையும் பட்சத்தில் அது பாரிய நெருக்கடியை நாட்டில் ஏற்படுத்தும். டொலர் வருமானம் குறைவது மட்டுமன்றி உள்நாட்டிலும் விவசாய உற்பத்தி வீழ்ச்சி அடையும் பட்சத்தில் அடுத்த வருட ஆரம்பத்தில் உணவு பஞ்சம் கூட நாட்டில் ஏற்படும் என்று எதிர்க்கட்சியினரும் பொருளாதார நிபுணர்களும் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த சூழலிலேயே அரசாங்கம் தற்போது இவ்வாறு தனியார் துறையினர் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சேதனப் பசளை திட்டத்திற்கே சகல சலுகைகளும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றது. இரசாயன உர பாவனை காரணமாக உடலியல் ரீதியான பாதிப்புகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்திருந்தது. எனினும் இதில் நடைமுறை சிக்கல்கள் பல காணப்படுவதன் காரணமாக தற்போது இந்த தீர்மானம் திருத்தப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் அரசாங்கம் தற்போது தனியார் துறையினருக்கு இரசாயன உரம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியிருப்பதுடன் அரசாங்கம் இதனை ஊக்குவிக்காது என்றும் அதற்கான சலுகைகளை வழங்குவதில்லை என்றும் தெரிவித்திருக்கின்றது.

எனினும் அரசாங்கம் இந்த விடயத்தில் விவசாயிகளின் பக்கமிருந்து சிந்தித்து பார்க்கவேண்டும். காரணம் நாட்டில் எக்காரணம் கொண்டும் விவசாய உற்பத்திகள் குறைவடையக் கூடாது. நெல் மற்றும் ஏனைய பயிர் வகைகள், மரக்கறி வகைகளின் உற்பத்தி வீழ்ச்சி அடையும் பட்சத்தில் எதிர்த்தரப்பினர் கூறுவது போன்று அடுத்த வருட ஆரம்பத்தில் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கான ஒரு நிலைமையை ஏற்படுத்தி விடக்கூடாது. அந்த நிலையை தடுக்கும் வகையில் அரசாங்கம் ஒரு சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதாவது அரசாங்கத்தின் தற்போதைய இந்த புதிய தீர்மானம் காரணமாகவும் மக்களின் பயிர்வகைகள் விவசாய நடவடிக்கைகள் மரக்கறி உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடாது.

இரசாயன உரத்தை தவிர்த்து சேதன பசளை திட்டத்துக்கு செல்வது சிறந்த தீர்மானமாகும். ஆனால் அதனை ஒரே தடவையில் செய்ய முற்படுவதே இங்கு பிரச்சினையாகவுள்ளது. அதனை படிப்படியாக செய்ய முடியும். அதாவது முதல் வருடத்தில் 25 வீதம் சேதனப்பசளை திட்டம், இரண்டாம் மூன்றாம் வருடங்களில் அதற்கு அதிகமான வீதம் என ஒரு நீண்ட கால அடிப்படையில் இந்த இரசாயன உர பாவனையை முற்றாக தவிர்க்க முடியும். காரணம் தற்போதைய சூழலில் எமது விவசாயம் மண் இரசாயன உரத்துடன் ஒன்றிப்போயிருக்கலாம். எனவே அதனை மீண்டும் சேதனை பசளை உரத்திற்காக உருவாக்கி எடுப்பது என்பது இலகுவான விடயமல்ல. அவ்வாறான ஒரு செயற்பாட்டை ஒரே தடவையில் முன்னெடுக்கும்போது அது நாட்டில் உணவு நெருக்கடியை, விவசாய உற்பத்தி நெருக்கடியை ஏற்படுத்தி விடும். தற்போது இந்த கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் இலங்கையானது பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றது. விவசாயத்துறையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் சர்வதேச வர்த்தகம் நெருக்கடிகளை சந்திக்கின்றது. எனவே இவ்வாறான ஒரு சூழலில் திடீரென தீர்மானங்களை எடுப்பது விவசாய உற்பத்தியைப் பாதித்து விடக்கூடாது. அது தொடர்பில் அரசாங்கம் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது தனியார் துறையினருக்கு இரசாயன உரத்தை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் அவர்கள் மிக அதிக விலையில் அவற்றை விவசாயிகளுக்கு விற்றால் அதனையும் விவசாயிகளால் தாங்கிக்கொள்ள முடியாது. எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் சிந்தித்து அடுத்த கட்டமாக சிறந்த மற்றும் விவசாய உற்பத்தியை பாதிக்காத வகையிலான தீர்மானத்தை எடுக்க வேண்டும். எந்த வகையிலும் நாட்டின் விவசாய உற்பத்தியும் விவசாயிகளும் பாதிக்கப்படக்கூடாது. அதேபோன்று அடுத்த வருட முற்பகுதியில் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கும் இடமளிக்கக்கூடாது. இவற்றை திட்டமிட்டு அரசாங்கம் சரியான முறையில் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# மும்பை தாக்குதலுக்கு 13 வருடங்கள்

## உலகை அச்சுறுத்தும் தீவிரவாதம்

முழு உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய மும்பை தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 13 வருடங்கள் ஆகின்றன. ஆனால் அந்த நினைவுகள் இன்றுவரை இந்திய மக்கள் மாத்திரமல்ல அனைத்துலகத்தினரினதும் உள்ளங்களிலிருந்து அழியா சுவடுகளாகியுள்ளன. தீவிரவாதிகளின் கொடூரமான தாக்குதல்களினால் மும்பை நகரம் அதிர்ந்தபோது அங்கு சென்றிருந்த பன்னாட்டவர்களின் நிலை குறித்து அறிய உறவினர்கள் தூதரகங்கள் ஊடக தொடர்பு கொண்டிருந்தனர். மறுப்புறம் இந்திய ஊடகங்கள் பல தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவத்தை நேரடி ஒளிபரப்பு செய்தன. இதுவே முழு உலகத்தின் பார்வையிலும் மும்பை தாக்குதல் சென்றடைய காரணமாகியது.

2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி கடல்வழியாக மும்பைக்குள் நுழைந்த பாகிஸ்தான் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் 10 பேர் மும்பை ரயில் நிலையம், தாஜ் நட்சத்திர ஹோட்டல் உள்ளிட்டவற்றில் கடும் தாக்குதலைநடத்தினார்கள்.

இதில் 166 பேர் கொல்லப்பட்டதுடன் பெரும்பாலானவர்கள் காயமடைந்தனர். சுமார் 60 மணித்தியால போராட்டத்தின் பின் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பாதுகாப்பு துறையினர் அனைத்து தீவிரவாதிகளையும் சுட்டுக்கொன்றதுடன் கசாப் என்ற தீவிரவாதியை உயிருடன் பிடித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பாதுகாப்புத்துறையினர் அமெரிக்க புலனாய்வு பிரிவான எப்.பி.ஐ. இன் உதவிகளையும் பெற்றுக்கொண்டனர். இதில் தீவிரவாதிகள் கடல்வழியாக வருவதற்குப் படகைப் பயன்படுத்தியிருந்தனர்.

அந்தப் படகில் பயன்படுத்திய யமாஹா என்ஜின் மூலமே தாக்குதல்தாரிகள் குறித்த





விசாரணைகளை முன்னெடுக்க முடிந்தன.

தீவிரவாதிகள் 10 பேர் பாகிஸ்தானில் இருந்து ஒரு படகுமூலம் இந்தியக் கடற்பகுதிக்குள் வந்தவுடன் எம்.வி.குபெர் என்ற கப்பலைக் கடத்தியமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதனூடாக விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சம்பவ தினத்திற்கு 3 நாட்களுக்கு முன்னர் அதாவது நவம்பர் மாதம் 23ஆம் திகதி,கடத்தப்பட்ட கப்பலின் கேப்டன் அமர்சந்த் சோலங்கி என்பவரை துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தி கப்பலை மும்பைக்குச் செலுத்தியுள்ளனர். ஏனெனில் தாக்குதலை திட்டமிட்ட தீவிரவாதிகள் மும்பை கடற்பகுதி குறித்து அறிந்திருக்கவில்லை.

இதன் போது சுமார் 30 மணிநேரம் மும்பை நோக்கி தீவிரவாதிகள் பயணித்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் மும்பைக்கு அருகே வந்ததும் கப்பலின் கப்டன் சோலங்கியை தீவிரவாதிகள் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

அதன்பின் பாகிஸ்தானில் இருந்து தாங்கள் இந்தியக் கடற்பகுதிக்குள் நுழைய பயன்படுத்திய சிறிய படகு மூலம் மும்பை கடற்பகுதிக்குள் ஜிபிஎஸ் தொழில்நுட்ப உதவியுடன் தீவிரவாதிகள் இரவு 8.15 மணிக்கு நுழைந்துள்ளனர்.

அந்த நிமிடம் தொடக்கம் கடுமையான துப்பாக்கி பிரயோகங்களை முன்னெடுத்தனர். பொதுமக்களை இலக்கு வைத்தே துப்பாக்கி பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சிறு குழுக்களாக பிரிந்த தீவிரவாதிகள் வாகனங்களை கடத்தி , சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம், மும்பையின் புகழ்பெற்ற தாஜ் ஹோட்டல், ஒபராய் டிரைடண்ட் ஹோட்டல், யூத கலாசார மையம் மற்றும் மருத்துவமனைகளை இலக்காக கொண்டு கடும் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

எவ்வாறாயினும் விசாரணைகளை தொடர்ந்த பொலிசார் பத்வார் கடற்பகுதியில் ஆதரவின்றி இருந்த சிறிய படகு ஒன்றை கண்டுபிடித்தனர். அதன்பின் அமெரிக்க எப்.பி.ஐ. உதவியுடன் படகில் பொருத்தப்பட்டிருந்த யமாஹா எஞ்சின் கொள்வனவாளர் தொடர்பில் அறிய முனைந்தனர். ஆனால், யமாஹா எஞ்சினின் பதிவிலக்கம் அழிக்கப்பட்டதால், கண்டுபிடிப்பதில் நெருக்கடி ஏற்பட்டது.

அதன்பின் ஜப்பானில் உள்ள யமாஹா நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை தொடர்பு கொண்டு குறித்த எஞ்சினின் பதிவிலக்கத்தை கண்டுபிடிக்க கோரினார்கள்.

எஞ்சின் பதிவிலக்கம் அழிக்கப்பட்டதால், அதில் உள்ள சிலிண்டர்களில் இருக்கும் இலக்கங்களை கொண்டு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது குறித்த யமாஹா படகு எஞ்சின் கராச்சியில் உள்ள ஒரு விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்டமை தெரியவந்தது.

அதன்பின் அமெரிக்க எப்.பி.ஐ. அதிகாரிகள் கராச்சியில் உள்ள அந்த குறிப்பிட்ட முகவரிடம் கேட்டபோது, அதேபோன்று 8 யமாஹா எஞ்சின்களை லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பின் நிதியாளர் ஒருவருக்கு 10 ஆண்டுகளுக்கு முன் விற்பனை செய்ததாகத் தெரிவித்திருந்தார்.

10 ஆண்டுகளுக்கு முன் கொள்வனவு செய்த படகு எஞ்சின் மூலம் மும்பைக்கு வந்த 10 லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது முதல்முறையாகக் இதன் போது உறுதி செய்யப்பட்டது. இதே வேளை, யமாஹா நிறுவனத்திடம் இருந்து பெற்ற படகு எஞ்சின் பதிவிலக்கம் உள்ளிட்ட ஆதாரங்களை பாகிஸ்தானிடம் இந்திய அரசு அளித்து குற்றவாளிகளைப் பிடிக்க வலியுறுத்தியது. அமெரிக்காவும் கடும் நெருக்கடி கொடுத்ததையடுத்து பாகிஸ்தான் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் முக்கியத் தலைவர் ஜகி உர் ரஹ்மான்லக்வி உள்ளிட்ட 7 பேரைக் கைது செய்தது.

**லியோ நிரோஷ தர்ஷன்**

பாகிஸ்தானின் விசாரணை அமைப்பான எப்.ஐ.ஏ. மும்பை தாக்குதல் வழக்கில் 27 பேரை குற்றவாளி என அறிவித்து கைது செய்தது. மேலும் மற்றொரு ஆதாரத்தையும் கண்டுபிடிக்க எப்.பி.ஐ. அதிகாரிகள் உதவினர். அதாவது மும்பை தாக்குதல் நடந்தபோது, கொலாபா என்ற இடத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் குண்டுகள் குறித்து எப்.பி.ஐ. அதிகாரிகளும், இங்கிலாந்து புலனாய்வு அதிகாரிகளும் ஆய்வு செய்தனர். அப்போது, அந்த வெடிபொருட்களில் இருக்கும் கைரேகைகளை ஒப்பிட்டுப்பார்த்த போது அது லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பினரது என்றும் முடிவு செய்தனர்.

மும்பை தாக்குதல் சம்பவம் தீவிரவாதத்தின் கோரமுகத்தை உலகுக்கு வெளிப்படுத்தும் ஒன்றாகவே அமைந்தது. இவ்வகையான அச்சுறுத்தல்கள் இன்றும் தொடர்கின்ற நிலையில் ஆப்கானிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களும் பிராந்தியத்தில் ஐயங்களை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனிதர்கள் மத்தியில் ஒரு மாணிக்கமாக வாழ்ந்த ஊடகத்துறை ஜாம்பவான் கானமயில்நாதன்

**லத்தீப் பாரூக்**

யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு செயற்பட்ட முக்கிய ஊடகவியலாளரான கனம் என்று பெரும்பாலானவர்களால் அறியப்பட்ட கானமயில்நாதன் 2021 நவம்பர் 22இல் காலமான செய்தி கேட்டு பெரும் கவலையுற்றேன்.

நான் அவரை முதன் முதலாகச் சந்தித்தது தற்போது செயல் இழந்துள்ள சுயாதீன பத்திரிகா சமாஜத்தில் 1960 களின் நடுப்பகுதியில். நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள நீண்ட நாட்கள் செல்லவில்லை.

நேர்மையும் பணிவன்பும் மிக்க ஒரு நண்பனை நான் அவரில் கண்டேன். அப்போது அவர் வெள்ளவத்தையிலும் நான் கொள்ளுப்பிட்டியிலும் வசித்து வந்தோம். பெரும்பாலும் வேலை முடிந்து இருவரும் ஒன்றாகவே பயணம் செய்வோம். மழை காலங்களில் நாம் இருவரும் எமது பகல் உணவை பகிர்ந்து கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

1970இல் நான் டெய்லி நியூஸ் பத்திரிகையில் இணையும் வரை இந்த நட்பு தொடர்ந்தது. பின்னர் நாம் இரு வெவ்வேறு நிறுவனங்களுக்காக பணியாற்றிய போதும் எமது நட்பு தொடர்ந்து நீடித்தது. அதில் எந்தக் குறைவும் இருக்கவில்லை. இருவரும் பெரும்பாலான நாட்களில் எனது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் சந்தித்துக் கொள்வோம்.

1979இல் டுபாயை தளமாகக் கொண்ட கல்ப் நியூஸ் தினசரி ஆங்கில பத்திரிகையை மீண்டும் கட்டி எழுப்ப இலங்கையில் இருந்து ஒரு குழு ஊடகவியலாளர்களை அழைத்துக் கொண்டு நான் டுபாய் சென்ற போது, நான் எனது குழுவில் இணைத்துக் கொள்ள விரும்பிய முதலாவது நபராக அவரே இருந்தார். ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

பிற்காலத்தில் அவர் யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட உதயன் தமிழ் தினசரி பத்திரிகையில் இணைந்து கொண்டார். 35 வருடங்களுக்கு மேலாக அவர் அந்தப் பத்திரிகையின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். உள்நாட்டு மோதல்கள் மற்றும் யாழ்ப்பாணம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலம் என பல நெருக்கடியான காலகட்டங்கள் இதில் அடங்கும்.

எவ்வாறாயினும் அவர் தனது கடமைகளில் நடுநிலை தவறாத ஒருவராகவே இருந்தார். அவரது உயிருக்கு பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள் இருந்தன. ஒரு முறை அவர் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மிக மோசான முறையில் ஒரு வாகனத்தால் மோதப்பட்டார். அந்தச் சம்பவத்தில் அவர் பலத்த காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

உதயன் அலுவலகம் மீதும் பல தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த குண்டு சம்பவங்களின் பின்னரும் நான் பல தடவை அவரை டுபாய்க்கு அழைத்துக் கொள்ள முயற்சித்தேன். ஆனால் அவை எதுவும் பலன் அளிக்கவில்லை.



பிறகு சுமார் 30 வருடங்களின் பின் அவர் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் வெள்ளவத்தையில் மருத்துவ சிகிச்சைகளின் நிமித்தம் தங்கி வசிப்பதாகக் கூறினார்.

இக்கட்டான கால கட்டங்களில் திறம்பட பணியாற்றிமைக்காக பல சர்வதேச விருதுகளையும் வென்ற ஒரு ஊடகவியலாளரே கானமயில்தான்.

நான் உடனே சென்று அவரை சந்தித்தேன். பிறகு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் மீண்டும் வாய்த்த பின் நான் அங்கு சென்று உதயன் அலுவலகத்தில் அவரை சந்தித்தேன். அவர் 36 வருடங்கள் உதயனில் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றார். பிறகு மூன்று வருடங்களுக்கு முன் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று அவரை சந்தித்தேன். அப்போது அவர் நோய்வாய்ப்பட்டுள்ளதைக் கண்டு மிகவும் கவலை அடைந்தேன். அந்த சந்திப்பு எனக்குள் பெரும் கவலையை தந்தது. இதுதான் நான் அவரை சந்திக்கும் கடைசி சந்தர்ப்பமா என்ற கேள்வியும் என் உள் மனதில் எழுந்தது.

கடந்த வாரம் முழுவதும் நண்பர் கானமயில்நாதன் அடிக்கடி எனது நினைவில் வந்தார். அவரோடு ஒரு முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவோம் என்று நான் எண்ணிய போது எதிர்பாராத விதாக அவரது மரணச் செய்தி எனக்கு கிட்டியது.

இந்த நாட்டில் ஊடகத்துறை என்பது வெறுமனே ஒரு பொதுமக்கள் தொடர்பு பணியாக மாறி உள்ள நிலையிலும் கானமயில்நாதன் இளைய தலைமுறை ஊடகவியலாளர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவே இன்றும் திகழுகின்றார்.

## பொன் மொழி

**இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப்பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக்கொள்வதாகப் பொருள்.**

**–அன்னை தெரேசா**

### தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராயினும்

# கொடிகள், அடையாளங்களை பிரதிநிதித்துவம் செய்யாது இறந்தவர்களை நினைவு கூரலாம்

### முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் திருத்திய கட்டளை

(கே.குமணன்)

இறந்தவர்களை நினைவுகூர்வது மானிடப் பண்பு. தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராயினும், அவ் அமைப்பின் கொடிகள், அடையாளங்களை பிரதிநிதித்துவம் செய்யாது இறந்தவர்களை நினைவு கூர முடியும் என மாவீரர் நாள் தடைக்கட்டளையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நேற்று திருத்திய கட்டளையாக்கி உத்தரவிட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட இயக்கத்தினுடைய நிகழ்வு ஒன்றாக நினைவுபடுத்தக்கூடியதாக நினைவுகூரல்களை மேற்கொள்ளாது இறந்தவர்களுக்கு பொதுவான நினைவு கூரல்களை மேற்கொள்ள முடியும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 17 மற்றும் 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தின் 7 பொலிஸ் பிரிவுகளில் மாவீரர் நாளை நினைவு கூர வழங்கப்பட்டிருந்த மாவீரர் நாள் தடையுத்தரவுக்கு எதிராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன் குகனேசன் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் முல்லை ஈசன் ஆகியோர் சார்பாக நேற்று சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம் மூலம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி .சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த திருத்திய கட்டளை யாக்கி உத்தரவிட்டுள்ளார் .



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன் குகனேசன் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் முல்லை ஈசன் ஆகியோர் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையம்,புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம்,மல்லாவி,ஒட்டுசுட்டான் ,மாங்குளம் ஆகிய 5 பொலிஸ் நிலையங்களால் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டு தமது பொலிஸ் பிரிவில் மாவீரர்நாள் நினைவு நிகழ்வை மேற்கொள்ள முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்த ஐந்து பொலிஸ் பிரிவுகளில் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவை திருத்திய கட்டளை ஆக்கி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வி.எஸ்.எஸ்.தனஞ்சயன்,ருஜிக்கா நித்தியானந்தராஜா ஆகியோர் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்து வாதங்களை மேற்கொண்டனர். வாதங்களை கேட்ட நீதிமன்று ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவை திருத்திய கட்டளை ஆக்கியுள்ளது.




### மாவீரர் நாள் நிகழ்வுக்கு

# விதித்த தடை கட்டளையை மீளப்பெற யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மறுப்பு

### மேல் நீதிமன்றை நாடுமாறும் தெரிவிப்பு

( எம்.நியூட்டன்)

மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதித்து வழங்கிய கட்டளையை மீளப் பெற யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

தடை உத்தரவு வழங்கி கட்டளையாக்கப்பட்டது நிரந்தரமானது என்றும் அதனை பிரதிவாதிகள் ஆட்சேபனைக்கு உட்படுத்தவேண்டுமாயின் மேல் நீதிமன்றை நாடுமாறும் யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் அறிவுறுத்தினார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்து யாழ்.நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது. முன்னர் கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 512 பிரிகேட் தலைமையகத்துக்கு முன்பாகவும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சூழலிலும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய எல்லையிலும் மாவீரர் நாளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 106ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும் இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியிருந்தனர்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போது நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் வரும் 28ஆம் திகதிவரை ஒரு வாரத்துக்கு மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த தடை உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டது. இந்த நிலையில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகள் மற்றும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டோர் சார்பிலான சட்டத்தரணிகள் நகர்த்தல் பத்திரம் சேர்ப்பித்து தடை உத்தரவு கட்டளை மீள் பரிசீலனை செய்யக் கோரினர்.

இருதரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம், தடை உத்தரவு கட்டளையை மீளப் பெற முடியாது என்றும் பிரதிவாதிகள் சார்பிலான ஆட்சேபனையை மேல் நீதிமன்றில் முன்வைத்து வாதாடுமாறும் அறிவுறுத்தினார்.

# பருத்தித்துறை நகரசபையின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றம்

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை நகரசபையின் அடுத்த 2022ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் சபைத்தலைவரின் மேலதிக ஒரு வாக்கினால்நிறைவேறியது.சபையின் விசேஷ கூட்டம் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானபோது சபைத் தலைவர் யோசப் இருதயராஜ் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

வாக்கெடுப்புக்குவிடுமாறு கோரியதை அடுத்து வாக்கெடுப்புக் குவிடப்பட்டது.வாக்கெடுப்பின்போது ஆளும் கட்சியான தமிழரசுக்கட்சிஉறுப்பினர்கள் 5 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினருமான 7பேரும் ஆதரவாகவும் எதிர்க்கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த ஒரு உறுப்பினருமாக 7 பேர் எதிராக வாக்களித்தனர்.

மொத்தமாகவுள்ள 15உறுப்பினர்களில் ஈ. பி. டி. பி.யைச் சேர்ந்த ஒருஉறுப்பினர் சமுகமளிக்காததால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டது. இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க இச்சூழ்நிலையில் சபைத்தலைவருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒருவாக்கை அளித்தமையால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு மலரஞ்சலி



( எம்.நியூட்டன்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தி முழந்தாளில் இருந்து தமது ஆத்மார்த்தமான அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

குறிப்பாக பல்கலைக்கழகச்சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இராணுவ பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மாணவர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மாணவர்கள் ஆத்மார்த்தமான முறையில் தமது அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

# உலக உணவுத்திட்டத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடல்

(எம். நியூட்டன்)

ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டத்துக்கான இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அப்துர் ராகிம் சிட்டுஹி தலைமையிலான அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குமான சந்திப்பு நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது

உலக உணவுத்திட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் குறிப்பாக உணவுப் பாதுகாப்பு,போஷாக்கு குறைபாடு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் மற்றும் ஜீவனோபாயத்திட்டங்கள் என்பவை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் ஒப்படைக்கப்பட்ட வயோதிபருக்கு கொரோனா

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் ஒப்படைக்கப்பட்ட வயோதிபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குச்சம் ஒழுங்கை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செங்கல்வரதராசா சக்திவேல் (வயது 76) என்பவர் நேற்று முன்தினம் புதன்கிழமை வீட்டில் வழுக்கி விழுந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடடுள்ளார்.

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை முதலாம் கட்டை சந்திப்பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தும்பளை மேற்கு பருத்தித்துறையை சேர்ந்த சண்முகராஜா துஷ்யந்தன் (வயது 21) என்பவராவார். சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன குளங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

(கண்டாவளை நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 30 அடியை அண்மித்துள்ளதுடன் ஏனைய குளங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளன.

வடமாகாணத்தின் அதிக நீர் விநியோக பரப்புகளையும் விவசாய நிலங்களையும் கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 9 பாரிய மற்றும் நடுத்தர குளங்களின் நீர்மட்டம் தற்போது அதிகரித்துள்ளன. அண்மைய நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக மேற்படி குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் ஐந்து குளங்கள் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய ஆரம்பித்துள்ளதுடன் ஏனைய நான்கு குளங்களின் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளன.நேற்று காலை நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள நிலைவர அறிக்கையின்படி கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 36 அடி நீர் கொள்ளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 29 அடி 8 அங்குலமாக உயர்வடைந்துள்ளது.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வெளிவாரிப் பரீட்சைகள்**

**1.இசைமாணி / நடனமாணி - நான்காம் வருடத் தேர்வு – 2017 (இறுதிச் சந்தர்ப்பம்)**

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 10.12.2021 (வெள்ளிக்கிழமை).

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்**

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**24.11.2021**



**தங்க ஆபரணங்கள் ஏலவிற்பனை**

பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனமாகவும் இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையின் அனுமதிபெற்ற கடன்வழங்கல் நிறுவனமாகவும் வர்த்தக பணிப்பாளரின் அனுமதியுடன் நடத்தப்படும் ஏஷியா அசெற் பினான்ஸ் பீ.எல்.சீ. நிறுவனத்தின் கீழே குறித்த கிளைகளில் 2021.06.30ஆம் திகதி அல்லது அதற்கு முன் வழங்கப்பட்டு மீள் கொடுப்பனவுக்கு உரிய திகதியிலிருந்து 90 நாட்கள் கடந்தும் கொடுப்பனவு கைவிடப்பட்டுள்ள காப்புறுதி தொகைக்கான பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ள தங்க ஆபரணங்களை அடகுசேவை சட்டத்தின் 85ஆம் பிரிவின் கீழே வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப கீழே குறித்த கிளை நிலையங்களில் ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

| அடகு வைக்கப்பட்ட கிளை | ஏலவிற்பனை திகதி மற்றும் நேரம் | ஏலவிற்பனை நிலையம் |
|---|---|---|
| ஹட்டன், பூடலுஓயா, ராகலை, தலவாக்கலை | 2021 டிசம்பர் 14ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இலக்கம்.101, பிரதான வீதி, ஹட்டன். |
| சிலாபம், திகன, புத்தளம், உடப்புவ, வென்னப்புவ, குருணாகல் | 2021 டிசம்பர் 15ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இலக்கம்.30, சுரதிஸ்ஸ மாவத்தை, குருணாகல். |
| கம்பளை, கேகாலை, மாத்தளை, நாவலப்பிட்டி | 2021 டிசம்பர் 16ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இலக்கம்.75, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி. |
| நகர கிளை (கொட்டாஞ்சேனை), கம்பஹா,மொரட்டுவ, நீர்கொழும்பு, வெள்ளவத்தை | 2021 டிசம்பர் 17ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு | இலக்கம்.507, காலி வீதி, கொழும்பு-06. |

குறிப்பு : ஏலவிற்பனைக்காக பிரவேச கட்டணமாக ரூ.5000/= ரொக்கமாக அறவிடப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

**உதவி பொது முகாமையாளர் (தங்கக்கடன்)**
**இல.76, பார்க் வீதி, கொழும்பு -02.**
**துரித அழைப்பு: 0767 888 222 தொ.பே: 0117 699 000**
**பதிவு இல.PB139**







# ஊவா மாகாண சிறுபான்மை மக்களது நலன்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு

## நிதியமைச்சர் உறுதியளித்ததாக அரவிந்தகுமார் எம்.பி. சபையில் தெரிவிப்பு

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

ஊவா மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியில் உறுதியளித்திருக்கிறார். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே அடுத்துவரும் ஆண்டுகளில் எமது பிரதேசங்களில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நம்புகிறேன் என்று பதுளை மாவட்ட ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஏ. அரவிந்தகுமார் சபையில் தெரிவித்தார்.

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் சிறுபான்மை மக்கள் சார்பாக ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் நபராக நான் உள்ளேன். என்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பும் சுமையும் அதிகம். இந்த சுமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைநுட்ப, மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை மேலோட்டமாக பார்த்தால் அதில் கவர்ச்சியோ, ஈர்ப்போ இல்லை. ஆனால் மிக ஆழமாக ஊடுருவி பார்த்தல் தனது கன்னி வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ள நிதி அமைச்சர் பல்வேறு வேலைத்திட்டங்களை உள்ளடக்கிய ஒரு வரவு செலவு திட்டத்தையே முன்வைத்துள்ளார்.

விசேடமாக கீழ்மட்டத்தில் உள்ளவர்களை உயர்த்துவதற்காக, அடிமட்டத்தில் உள்ள, வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களை உயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டமே இது.

நாட்டின் சகல துறைகளையும் முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணக்கருவுடன் இந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப் பட்டுள்ளது. ஊவா மாகாணத்தில் இரண்டு மாவட்டங்கள், பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 25 வீதத்துக்கும் அதிகமான சிறுபான்மை மக்கள் வாழ்கின்றனர். இதில் 75 வீத தமிழர்களும் 25 வீத முஸ்லிம்களும் வாழ்கின்றனர். ஆனால் துரதிஷ்டவசமாக சிறுபான்மை மக்கள் சார்பாக ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் நபராக நான் உள்ளேன். என்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பும் சுமையும் அதிகம். ஆனால் இந்த சுமையை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தார்மிக பொறுப்பு என்னிடம் உள்ளது. ஆனால் தனி நபராக என்னால் இதனை செய்ய முடியாது. அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு எனக்கு அவசியம். நிதி அமைச்சர் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக தனிப்பட்ட ரீதியில் உறுதியளித்துள்ளார். அதற்கமைய அடுத்துவரும் ஆண்டுகளில் எமது பிரதேசங்களில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நம்புகிறேன். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் நாம் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும் என்றார்.

# சோலன்ஸ் தோட்டத்தில் காணி அபகரிப்பு தடுத்து நிறுத்தப்பட்டது



## இடமளிக்க மாட்டேன் என்கிறார் வடிவேல் சுரேஷ்

(மீதும்பிட்டிய நிருபர்)

லுணுகலை சோலன்ஸ் தோட்டத்தில் எனது வேண்டுகோளின்பேரில் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த காணியை வெளியாட்களுக்கு சட்டவிரோதமாக வழங்குவதற்கு லுணுகலை பிரதேச சபைத் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தோட்ட தலைவர்களுடன் இணைந்து லுணுகலை பிரதேச சபைத் தலைவரால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி சட்டவிரோத நடவடிக்கையை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

குறிப்பாக பதுளை மாவட்டத்தில் பெருந்தோட்டக் காணிகளை வெளியாட்களுக்கு சட்டவிரோதமான முறையில் பிரித்துக் கொடுப்பதற்கு தீய சக்திகளினால் அரசியல் அங்கீகாரத்துடன் நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

மலையக மக்களின் பாதுகாவலன் என்ற ரீதியில் மலையகப் பெருந்தோட்ட காணிகளை சட்டவிரோதமான முறையில் வெளியாட்கள் அபகரிப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் இடமளிக்கமாட்டேன். இத்தகைய காணி அபகரிப்பு செயற்பாடுகளினால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான பிரச்சினைகளுக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முகம்கொடுக்க நேரிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.




# அட்டன் – டிக்கோயா நகர சபை வரவுசெலவு திட்டம் நிறைவேற்றம்



(மஸ்கெலியா நிருபர்)

அட்டன் – டிக்கோயா நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் செவ்வாய்க்கிழமை நகரபிதா எஸ். பாலச்சந்திரனால் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்தின் பின்னர் 12 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சபை அமர்வில் கலந்து கொண்ட தலைவர் உட்பட உறுப்பினர்களில் ஆதரவாக 12பேர் வாக்களித்திருந்தார்கள். தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களில் ஒருவர் எதிராக வாக்களித்திருந்தார். இருவர் வருகை தரவில்லை.

நகரபிதா பாலச்சந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருமானம் 23 கோடியே 77 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாவாகவும் செலவினமாக 23 கோடியே 77 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், ஒவ்வொரு வட்டாரத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக அடுத்த ஆண்டுக்கு உறுப்பினர்களுக்கு தலா 40 இலட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பிரதேசங்களில் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் படுத்தப்படும். எமது நகர சபை 2018 இல் பொறுப்பேற்கப் பட்ட பிறகு சமர்ப்பிக்கப் படும் நான்காவது வரவு செலவுத் திட்டம் இது வாகும். அமரர் ஆறுமுகன் தொண்டமான் மறைவுக்குப் பிறகு தேவையான நிதியை ஒதுக்கிக் கொடுத்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு "சுபிட்சத்தின் நோக்கு" உட்பட பல திட்டங்களில் நிதியை ஒதுக்கிக் கொடுத்த ஜனாதிபதி பிரதமருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய நகர சபை உறுப்பினர்களுக்கும் நன்றி உரித்தாகட்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பரவல் காரணமாக முழு உலகமும் பாதிக்கப்பட்டது போல் எமது நாடும் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. நகர சபை ஊழியர்கள் பலர் கொவிட் 19 தொற் றுக்கு ஆளாகியிருந்தார்கள். அதனால், அட்டன் நகர சபையின் அபிவிருத்திப் பணிகளும் தடைப்பட்டும் தாமதமாகியும் நாம் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாத சூழ்நிலை உருவாகியிருந்தது. நாடு 78 நாட்கள் முடக்கப்பட்ட நிலையில், அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடையும் பாரிய இழப்பையும் நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# தலைவர்கள் இருவர் பணி நிறுத்தம்

## 300 தொழிலாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(பதுளை நிருபர்)

சென்ஜேம்ஸ், ரொக்கத்தன்னை, பசறை பகுதியின் கள்ளுலை ஆகிய தோட்டங்களில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் தோட்ட மட்டத் தலைவர்களை அடக்கி முடக்கி வைக்கும் வகையிலான செயற்பாடுகளை முகாமைத்துவங்கள் திட்டமிட்டு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் பதுளை மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

சென்ஜேம்ஸ் பெருந்தோட்டத்தில் ஐக்கிய தொழிலாளர் முன்னனி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களின் இரு தலைவர்களை தோட்ட முகாமைத்துவம் சேவை நீக்கம் செய்தது.

இதனை ஆட்சேபித்து அத்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 300 தொழிலாளர்கள் நேற்று வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர். தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும்படி தோட்டத்தலைவர்கள் தோட்ட முகாமைத்துவத்திடம் வலியுறுத்தியதையடுத்தே தோட்ட முகாமைத்துவம் குறிப்பிட்ட தோட்ட மட்டத் தலைவர்களை வேலை நீக்கம் செய்தது. இது குறித்து சென்ஜேம்ஸ் தோட்ட அலுவலகத்தில் தொழிற்சங்க மட்டத்தில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்துள்ளன.

வேலை நீக்கம் செய்த தோட்ட மட்டத் தலைவர்களை மீளவும் வேலைக்கு அமர்த்தும் வகையில், தொழிலாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இதே போன்றதோர் நிலையே கள்ளுலை பெருந்தோட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. அங்கு தொழிலாளர்கள் 13 கோரிக்கைகளை முன்வைத்து பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டுள்ளனர். இங்கு 250 தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டுள்ளனர். ரொக்கத்தன்னை பெருந்தோட்டப்பிரிவிலும் தொழிலாளர்கள் அதிமுக்கிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் குதித்துள்ளனர்.

# முச்சக்கரவண்டி பள்ளத்தில் பாய்ந்து விபத்து; ஒருவர் பலி



(அட்டன், பொகவந்தலாவை நிருபர்கள்)

அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா பெரிய மெணிக்வத்தை பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அட்டன் டிக்கோயா பகுதியிலிருந்து டிக்கோயா பெரிய மெணிக்வத்தை பகுதிக்கு சென்றுகொண்டிருந்த குறித்த முச்சக்கர வண்டி நேற்றுமுன்தினம் (24) இரவு 7 மணியளவில் விபத்துக்குள்ளானது. இதில் டிக்கோயா பெரிய மணிக்வத்தை பகுதியை சேர்ந்த சுந்தராஜ் (வயது 65) எனபவர் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த மூவரும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கிண்ணியாவில் துக்கம் அனுஷ்டிப்பு




(திருமலை மேலதிக,கந்தளாய் மேலதிக நிருபர்கள்)

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற விபத்துச் சம்பவத்துக்கு பரவலாக கண்டனமும் அதேநேரம் மரணித்தவர்களது குடும்பத்தாருக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று வியாழக்கிழமை கிண்ணியா நகர் முழுவதும் வர்த்தக, வியாபார நிலையங்கள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

பள்ளிவாசல்கள் சம்மேளனம், உலமா சபை, சூரா சபை, வர்த்தக சம்மேளனம் என்பன இணைந்து இவ்வாறு துக்கதினம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற படகுப்பாதை விபத்துச் சம்பவத்தில் பாடசாலை சிறுவர்கள் உட்பட அறுவர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில் மேலும் இருபதுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.இதனையடுத்து கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் பதற்றத்துடனான களேபரம் ஏற்பட்டிருந்தது.பொதுமக்கள் கலவரத்தில் ஈடுபட்டதுடன் சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான நிலையிலேயே நேற்றைய தினம் மரணித்த அறுவருக்காக கிண்ணியா முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் வர்த்தக நிலையங்கள் ,பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன மூடப்பட்டிருந்ததுடன் கடைகளிலும் இல்லங்களிலும் வெள்ளைக்கொடிகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

இதனால் கிண்ணியாப் பிரதேசம் சோகத்தில் மூழ்கி வெறிச்சோடிக் காணப்பட்டது.




# மட்டு. வைத்தியசாலையில் கவன ஈர்ப்புப்போராட்டம்






(பட்டிருப்பு நிருபர்)

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சுகாதாரத் துறையினர் நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதாரத் தொழில் வல்லுனர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சேவைத் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்,சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும்,கடந்த அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட பதவி உயர்வு தீர்மானங்கள் இதுவரையில் நிறைவேற்றப்படாமை, கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும்,தர நிலை தொடர்பான சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளபோதிலும் இதுவரையில் அதனை நடைமுறைப்படுத்தாமை,சுகாதாரத் துறையில் உள்ளவர்கள் பட்டங்களைப்பெறும்போது அவர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தாதியர்கள்,மருந்தக உதவியாளர்கள்,மருந்தாளர்கள் இணைந்து சுகவீன விடுமுறைப்போராட்டத்தை முன்னெடுத்து வரும் அதேநேரம் நேற்று கவன ஈர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் காரணமாக வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(அம்பாறை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை (25) காலை 08.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் மஹஓயா பிரதேசத்தில் 83.02 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த பொத்துவில் வானிலை அவதான நிலைய கண்காணிப்பாளர் எம்.ஏ.எம். அக்மல் ,ரூபஸ்குளத்தில் 61.05 மில்லிமீற்றர், பாணமை பிரதேசத்தில் 56.09 மில்லிமீற்றர், லகுகல பிரதேசத்தில் 46.7 மில்லிமீற்றர், தீகவாபி பிரதேசத்தில் 45 மில்லிமீற்றர், அம்பாறை பிரதேசத்தில் 39.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 03 நாட்களாக பெய்து வரும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள் வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. பொத்துவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அடைமழையினால் தாழ்நிலப்பிரதேசங்களில் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளதோடு தாம்போதிகளிலும் வாய்க்கால்களிலும் நீர் பெருக்கெடுத்துள்ளன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாலை வேளையில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்கின்றது. கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை. இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நன்னீர் மீன்பிடித் தொழிலும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. இதேவேளை அன்றாட தொழிலாளர்களின் நாளாந்த தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. கடல் மீன், மரக்கறிவகைகள் என்பவற்றின் விலைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(மாமாங்கம் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஸஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிவந்த 60 பேரையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. எம்.றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று வியாழக்கிழமை (25) உத்தரவிட்டார்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பொலன்னறுவை, அனுராதபுரம், கேகாலை மற்றும் திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்கு காணொளி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தற்போது தனிமைப் படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக நீதிமன்றுக்கு இவர்களை அழைத்துவர முடியாததையடுத்து அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

# படகுப்பாதை விபத்து மூவருக்கு விளக்கமறியல்

(கந்தளாய் மேலதிக நிருபர்)

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகுப்பாதை விபத்துச் சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய கிண்ணியா,பெரியாற்றுமுனை ,கிண்ணியா பகுதிகளைச் சேர்ந்த 40,35மற்றும் 53 வயதுகளையுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட குறித்த படகுப்பாதையை இயக்கிய இருவரும் ,பாதையின் உரிமையாளருமே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் செவ்வாய்க்கிழமை(23)படகுப்பாதை விபத்துக்குள்ளானதில் நான்கு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்ததுடன் இருபதுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சம்பவம் குறித்து விசாரணையை முன்னெடுத்த கிண்ணியா பொலிஸார் சந்தேக நபர் ஒருவரையும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் இருவரையும் கைது செய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் புதன்கிழமை ஆஜர்படுத்தியபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மட்டு.மாவட்டத்தில் கடும் மழை 119.9 மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவு

(புதிய காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக தாழ் நிலப்பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை 8.30 மணிவரையான 48 மணித்தியாலத்தில் 119.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.புதிய காத்தான்குடி, நாவற்குடா, ஆரையம்பதி, வெல்லாவெளி ,கொக்கட்டிச்சோலை, கிரான் உட்பட பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு



வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பாதைகளில் நீர் தேங்கியுள்ளால் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.இதேவேளை கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது .






ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 96ஆவது பிறந்த தினம் கடந்த 23 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. கொட்டாஞ்சேனை ஸ்ரீ சத்ய சாயிபாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாதன் தலைமையில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்வில் பிரசாந்தி கொடியினை அறங்காவலர் கே.பி.பாலநாயகன் ஏற்றி வைப்பதையும், பாபாவின் இறைகீதங்கள் இசைக்கப்பட்டு ஆரத்தி எடுப்பதையும் மத்திய நிலைய பாபாவின் பாடல் இசைக்குழுவின் சிரேஷ்ட சாய் பக்தர் இராஜ கோபால் கௌரவிக்கப்பட்டபின் பிறந்த நாள் கேக் வெட்டுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஜே.எம்.சுவாமிநாதன் மற்றும் சாய் அன்பர்களையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: எஸ்.எம்.சுரேந்திரன்)

# புலம்பெயர்ந்த இலங்கையர்களின் பங்களிப்பைப் பெற வேண்டும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சபையில் கோரிக்கை

(ஆர்.யசி.,எம்.ஆர்.எம்.வசீம்)

புலம்பெயர் மக்களை சிங்களம் தமிழ், முஸ்லிம் என வகைப்படுத்தப்படுவதை நிறுத்தி, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்த இலங்கையர்களின் முழுமையான பங்களிப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை எமது நாட்டின் சொத்தாக கருத வேண்டும். இந்த மக்களை நம் நாட்டின் வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்கான திட்டம் அல்லது மூலோபாய திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் முழுப் பங்களிப்பைப் பெறுவதற்கு இந்தியா போன்ற நாடுகள் எவ்வாறு விசேட முன்னுரிமையுடன் செயற்படுகின்றன என்பதை காண்கிறோம். புலம்பெயர் மக்களை தமிழ், சிங்களம், முஸ்லிம் என வகைப்படுத்தப்படுவதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். பிரிவினைவாத யுத்தம் முடிந்துவிட்டது. தொடர்ந்து பிரிவினைவாதத்தை போஷிப்பதை நாங்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். பிரிவினைவாத மனப்பான்மை மற்றும் எண்ணங்களிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

இலங்கைக்கு இந்த புலம்பெயர்ந்த இலங்கையர்களின் முழுமையான பங்களிப்பைப் பெறுவதற்கும் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் ஒட்டுமொத்த மூலோபாய வேலைத்திட்டத்தை அணுகுவதற்கும் மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்குமாறு வலியுறுத்த விரும்புகிறேன். மேலும் கடந்த ஒக்டோபர் மாதம் வெளிவிவகார அமைச்சரிடம் நான் எழுப்பிய கேள்விக்கு அவர் வழங்கிய பதிலில் நான் திருப்தி அடையவில்லை. அதில் பாலஸ்தீனத்தை பற்றி குறிப்பிடவில்லை. அன்றைய பலஸ்தீன ஒத்துழைப்புக் குழுவின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருந்தார். அவருக்கு துரோகம் இழைக்கும் வகையில் செயற்படுகின்றனர். எமது நாடும் பல தசாப்தங்களாக காலனித்துவ நாடாக இருந்தது. இன்று உலகில் எஞ்சியிருக்கும் கடைசி காலனித்துவ நாடாக பாலஸ்தீனம் இருக்க வேண்டும் என்றார்.

# தகவலறிதல் உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை எடுங்கள்

## தேசிய ஊடக ஒன்றியம் கோரிக்கை

தகவலறிதல் உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்து நியதிச்சட்டமுறைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கட்சியையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினர்களை வலியுறுத்துகிறோம் என்று தேசிய ஊடக ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பில் அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டில் 2016இன் 12ஆம் இலக்க தகவலறிதல் உரிமைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தகவலறிதல் உரிமைகள் ஆணைக்குழு இன்றளவில் இரண்டு மாதங்களுக்கு கிட்டிய காலமாக செயலிழந்து காணப்படுகின்றது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாமையே இதற்கான காரணமாக அமைந்துள்ளது. சட்டத்தின்படி மேற்படி பொறுப்பினை சட்டவாக்கப் பேரவையும் ஜனாதிபதியுமே வகிக்கின்றார்கள். 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினால் சட்டவாக்கப் பேரவை ஒழிக்கப்பட்டமையால் அந்த தத்துவங்கள் பாராளுமன்றப் பேரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அப்போதைய சபாநாயகர் கரு ஜயசூரியவினால் கையொப்பமிடப்பட்ட பின்னர் சட்ட அமுலாக்கம் தொடங்கியது. அதன் பின்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டுப் பதவிக்காலம் கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்காக வேட்புமனுக்களை அழைப்பிப்பதற்கான செய்தித்தாள் அறிவித்தலொன்று பாராளுமன்றப் பேரவையால் பிரசுரிக்கப்பட்டது. அதற்கிணங்க வேட்பு மனுக்களை சமர்ப்பிப்பதற்கான காலம் ஒக்டோபர் 19 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. சட்டத்தின் 12 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள வகையில் சட்டத்தரணிகள் சங்கம், ஊடக அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் மூலமாக பாராளுமன்ற பேரவைக்கு வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

தகவலறிதல் உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 பேர் ஆகும். அதில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார். வேட்பு மனுக்கள் மத்தியில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் முன்மொழியப்பட்டவர் கட்டாயமாக நியமிக்கப்படல் வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே துரிதமாக தகவலறிதல் உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்து நியதிச்சட்டமுறையான அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கட்சியையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினர்களை வலியுறுத்துகிறோம்.







# 27 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்ரா)

நாட்டில் நேற்று வியாழக்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 27 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14 232 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 19 ஆண்களும் 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களுள் 20 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

மேலும் நேற்று மாலை வரை 529 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 560134 ஆக உயர்வடைந்துள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களுள் 528400 பேர் குணமடைந்துள்ளனர். 17502 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி / 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர். திரு.
**வினாசித்தம்பி சிவஞானம்**
தோற்றம் : 19.09.1929
மறைவு : 26.10.1995

அமரர். திருமதி.
**மனோரஞ்சிதமலர் சிவஞனம்**
தோற்றம் : 15.10.1938
மறைவு : 02.12.2015

**திதி : 26.11.2021**

ஒப்புவமை இல்லாத உங்கள் ஒளி மிகுந்த அன்பு
முகத்தை நாம் எப்போது காண்போம்!
இப்போது உங்கள் முகம் காண
முப்பொழுதும் ஏங்குகின்றோம் அம்மா! அப்பா!
தூங்காத விழிகள், துடிக்கின்ற இமைகள், தாங்காத இதயம்
கொண்டுங்கள் பாசமுகம் காணத் துடிக்கின்றோம்!
அம்மா எனும் ஜீவநதி! தந்தை எனும் பேராழி!
தந்தையின் அறிவும், தாயின் அன்பும் மாசில்லா மாண்பு!
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு
வெகுதூரம் சென்றாலும் ஏங்கித் தவிக்கின்றோம்!
அன்பு அன்னையே! தந்தையே!
உயர்வாக இறைபதம் உங்களுக்கு நிழலாகும்!
ஓம் சாந்தி!

தகவல்: குடும்பத்தினர் 0777 603456.



கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் உட்பட அனைவரதும் ஆத்ம சாந்திக்காக வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்துக்கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டபோது...

# ரூ.20 மில். பெறுமதியான 'குஷ்' போதைப் பொருள் மீட்பு

(எம்.எப்.எம். பஸீர்)

குஷ் என அறியப்படும் ஒருவகை கஞ்சா போதைப் பொருள் அடங்கிய 10 பொதிகளை இலங்கை சுங்கத் திணைக்களத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்று கைப்பற்றியுள்ளனர். கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்று நிலையத்தில் வைத்து இவைகைப்பற்றப்பட்டதாகவும் அதன் பெறுமதி சுமார் 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமானது எனவும் சுங்க ஊடகப் பேச்சாளர், சுங்கப் பணிப்பாளர் ( சட்டம்) சுதத்த சில்வா கூறினார்.



சுமார் 1300 கிராம் நிறையுடைய இந்த பொதிகள், சுங்கப் பிரிவின் தடை அகற்றல் சான்றிதழ் பெறுவதற்காக, மத்திய அஞ்சல் பரிமாற்று நிலையத்தில் வைக்கப்பட்டிருந்துள்ளது. இந் நிலையிலேயே சுங்க உளவுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இப்பொதிகள் சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 01 02 1938 — விண்ணில் 26 11 2020

அமரர் **சவிரிமுத்து யோசவ் பெர்ணாண்டோ**
**(யப்பான் சூசைப்பிள்ளை)**
**ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்**

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் உங்கள் நினைவுகள் என்றென்றும் அழியாது அப்பா. கண்ணின் இமைபோல் எம்மைக் காத்த அப்பாவே உங்கள் நினைவுகளுடன் என்றும் வாழ்கிறோம். உமது சிரித்தமுகம் எம்மை விட்டுப் பிரிந்தது உங்கள் பாசமும் அன்பும் எம்மை விட்டு என்றென்றும் பிரியாது. உங்கள் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கிண்ணியாவில்...

(தொடர்ச்சி)

கிண்ணியா பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர், விசாரணைகளினிடையே இவ்வாறு கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். இதன்போது அவரை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் ஐ.பி. ரஸாக் உத்தரவிட்டார்.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 06 பேர் உயிரிழந்த படகுப் பாதை விபத்து தொடர்பில் முன்னதாக மூவர் கைது செய்யப்பட்டனர். அந்த மூன்று பேரையும் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (24)உத்தரவிட்டிருந்தது.

படகுப் பாதையின் உரிமையாளர், செலுத்துநர் மற்றும் கட்டணம் வசூலிப்பவர் ஆகிய 30,40,53 வயதுகளையுடைய மூவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர். கவனயீனமாக செயற்பட்டு 6 பேருக்கு மரணத்தை ஏற்படுத்தியமை மேலும் 20 பேருக்கு காயமேற்படுத்தியமை தொடர்பில் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த குற்றச்சாட்டின் கீழ் நேற்று முன்தினம் மாலை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட அந்த மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் ஐ.பி. ரஸாக் உத்தரவிட்டிருந்தார்.

விசாரணைக்கு அழைக்கப்பட்ட நகர சபைத் தலைவர்

இந்நிலையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கமல் சில்வா, திருகோணமலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக்க ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பிரசன்ன பிரஹ்மனகேயின் வழி நடத்தலில் கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் மேலதிக சிறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது நேற்று கிண்ணியா பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்ட நகர சபைத் தலைவர் நளீம், அங்கு வைத்து கைது செய்யப்பட்டார். இக்கைது தொடர்பில் கேசரியிடம் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ,

இந்த 6 பேரின் உயிரிழப்புக்கு காரணமான சம்பவத்துக்கு மறைமுகமாக நகர சபையின் தலைவர் உதவி ஒத்தாசை புரிந்துள்ளார். எந்த விதமான பரிசோதனைகளும் இன்றி அந்த படகுப் பாதையை நடத்தி செல்ல அனுமதியளித்துள்ளார். அது குறித்த எந்த அவதானத்தையும் அவர் செலுத்தவில்லை. இவ்வாறான பின்னணியிலேயே சம்பவத்துடன் அவருக்கு குற்றவியல் பொறுப்பு சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார் எனக் குறிப்பிட்டார்.

முன்னதாக கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் கடந்த 23 ஆம் திகதி செவ்வாயன்று படகுப் பாதை கவிழ்ந்ததில், மூன்று வயதுக்கும் 8 வயதுக்கும் இடைப்பட்ட 4 சிறுவர்களும் 32 வயது பெண் ஒருவரும் 70 வயது ஆண் ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்திருந்த நிலையில் அவர்களில் 18 பேர் கிண்ணியா தள வைத்தியசாலையிலும் ஒருவர் திருமலை வைத்தியசாலையிலும் மற்றொருவர் கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. **E.மகாலிங்கம்பிள்ளை**

**பிறப்பு: 30.04.1947 இறப்பு: 08.12.2009**

**திதி: 26.11.2021**

என்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமகள்மார்,
பேரன்மார், பேத்தி
NO.6, MUMTHAZ MAHAL ROAD, (OFF) ROHINI ROAD,
COLOMBO-06.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **திரு.நடராஜா பாலச்சந்திரன் (JP)**
**(பாலா அண்ணன்)**

உரிமையாளர் வவுனியா வைன் ஸ்ரோர்ஸ், பிரபல வர்த்தகர், சமூக சேவையாளர்,
வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோவில் தர்மகர்த்தா சபை கௌரவ செயலாளர்

அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்,
குடும்பத்தின் அச்சாணியாய் எம்மை
அரவணைத்து ஆளாக்கி 29-10-2021 இறைபதம்
அடைந்த எமது அன்புச்சகோதரன் திரு.நடராஜா
பாலச்சந்திரன் அவர்களின் 31ஆம் நாள்
அந்தியேட்டி கிரியைகள் 27-11- 2021
நாளைசனிக்கிழமை கீரிமலையிலும்,
ஆத்ம சாந்தி கிரியைகள்
28-11- 2021 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது
இல்லத்திலும், அதனைத் தொடர்ந்து வவுனியா
ஸ்ரீ கந்தசாமி கோவில் திருமண மண்டபத்தில்
மதிய போசனமும் நடைபெறும்.

நன்றி.
**தகவல் : குடும்பத்தினர்**
156,1ஆம் குறுக்கு வீதி, வவுனியா.

உ
ஸ்ரீ ராம ஜெயம்

## 22வது வருட நினைவஞ்சலி

திருச்சி மாவட்டம், திண்ணனூர் கிராமம்
மாத்துடையான் கோத்திரம்



அமரர் **பெரி. திருப்பதியா பிள்ளை**

இறப்பு : 29.11.1999 | திதி: 26.11.2021

அன்புடன் நினைவு கூரும் - குடும்பத்தினர்
T.ராமநாதன்
திண்ணனூர் இல்லம்

இல.12, கிங்ரோஸ் அவெனியு, கொழும்பு-04

## இலங்கையை...

(தொடர்ச்சி)

நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எவரும் எம்மை அச்சுறுத்துவதால் அடிபணியப்போவதில்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சபையில் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சாட்சியங்கள் எவ்வாறு திரட்டப்பட்டன, யார் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டதென்ற உண்மைகளை தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு,பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு,வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

சர்வதேச நாடுகளிடம் நாம் மண்டியிடத்தயாராக இல்லை. இலங்கையின் சுய கௌரவத்தை பாதுகாப்பதே எமது கொள்கையாகும். நாம் தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு தகவல்களை வழங்கிக்கொண்டுள்ளோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் அதிகாரிகள் இருவர் ஜனவரி மாதத்தில் நாட்டுக்கு வருகின்றனர். அவர்களிடம் நாம் எதனையும் மறைக்க மாட்டோம்.

அவர்கள் இலங்கைக்கு வர முடியும். நாட்டின் சகல பகுதிகளுக்கும் பயணிக்க முடியும். எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முடியும். ஆரம்பத்தில் இருந்தே ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாக நாம் பங்களிப்பு செலுத்தி வருகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையை கட்டியெழுப்புவதிலும் இலங்கையர்கள் பாரிய சேவையாற்றியுள்ளனர். மனித உரிமைகள் ஆணைக் குழுவையும் ஆணையாளரையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் இலங்கைக்கு எதிராக சாட்சியங்களை திரட்டி சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் இலங்கையை கொண்டு நிறுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு ஏதுவான இலங்கைக்கு என்ற விசேட பொறிமுறையை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் சட்டம் மற்றும் சம்பிரதாயங்களுக்கு முற்றிலும் விரோதமான செயற்பாடாகும். அவர்களுடன் இணைந்து பயணிப்பதால் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. செப்டெம்பர் மாதத்தில் கூடிய மனித உரிமைகள் பேரவையின் போதும் இலங்கைக்கு எதிராக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சாட்சியங்கள் இருப்பதாக ஆணையாளர் தெரிவித்தார். அந்த சாட்சியங்கள் என்ன? எவ்வாறு இந்த சாட்சியங்கள் திரட்டப்பட்டன? சட்ட முறைப்படி இதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இந்த சாட்சியங்களை யார் பெற்றுக்கொடுத்தது, அதன் உண்மைத்தன்மை என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். வெளிப்படைத் தன்மை இல்லாது, மறைந்திருந்து முன்வைக்கும் சாட்சியங்களை ஏற்றுக்கொண்டு சுயாதீன நாட்டுக்கு எதிராக சாட்சியங்களை பயன்படுத்த எந்த பொறிமுறையும் இல்லை.

அவர்களின் நிலைப்பாடுகளை முன்னெடுக்க தேசிய நிறுவனங்களுக்கு கால அவகாசத்தை பெற்றுக்கொடுக்கவும் வேண்டும். தேசிய பொறிமுறையில் ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள் இயங்க வேண்டும். அதற்கான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமாக எமக்குக் கிடைத்த தகவல்களை வெளிப்படுத்துவோம். அதேபோல் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்க நாம் தயாராக இல்லை. அச்சுறுத்தல் மூலமாக நாம் தீர்மானம் எடுக்கமாட்டோம். ஆனால் நான்கு தசாப்தங்களாக பின்பற்றப்படும் சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவருவோம். அதற்கான திருத்தங்களை சபையில் விரைவில் முன்வைப்போம். இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தை நாளை நான் தெளிவுபடுத்தவுள்ளேன்.

இந்தியாவை நாம் எதிரியாக்கியுள்ளதாக தமிழ் அரசியல் தரப்பு கூறுகின்றது. அது உண்மையில்லை. அண்மையில் இலங்கை இந்திய நட்புறவு மாநாடு இடம்பெற்றது. அது வெற்றியளித்தது. அதேபோல் இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் சகலரும் ஒரு நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். தேசிய இணக்கப்பாடு ரீதியில் வெளிநாட்டு கொள்கை கையாளப்படுவதை சகல நாடுகளும் உணரும் விதத்தில் செயற்பட வேண்டும் என்றார்.

## அரசாங்கத்தின்...

(தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன சபையில் அரசாங்கத்தை எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வுகளின் போது ஆளுந்தரப்புக்குள் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் பாரிய கருத்து மோதல் ஏற்பட்டது. இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகரவையும் கடுமையாக விமர்சித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு பதில் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகையில்,

அமைச்சர் மஹிந்தானந்த, வேகமாக ஆவேசப்பட்டு உரையாற்றிவிட்டார். என்னை இலக்கு வைத்து கூறும் காரணிகளுக்கு முன்னாள் ஜனாதிபதியாக பதில் கூற வேண்டிய உரிமை எனக்கும் உண்டு. நாம் யாருடனும் மோதிக்கொள்ள மாட்டோம். அவ்வாறான இனம் நாம் அல்ல. நாம் இரக்கப்படும் இனம். ஆனால் நாம் அடித்தால் இவ்வாறு அல்ல வேறு விதத்தில் தான் அடிப்போம் என்பதையும் கூறிக்கொள்கின்றேன். அமைச்சர் மஹிந்தானந்த கூறிய விடயங்கள் குறித்து முரண்பாடுகள் இல்லை. நிகழ்கால ஜனாதிபதி எடுத்துக்காட்டாக உள்ளதாக கூறினார். அதுவும் பிரச்சினை இல்லை. ஆனால் எனது ஆட்சிக்கால வரவு செலவுகளை எடுத்துக்கொண்டு ஒப்பிடுவதன் மூலமாக நான் அனாவசியமாக செலவழித்துள்ளேன் என்ற காரணிகளை மக்களிடம் கொடுத்துள்ளனர். அவ்வாறு என்னாலும் ஒப்பிட முடியும். ஆனால் கண்ணாடி வீடுகளில் இருந்துகொண்டு கல்வீச நானும் தயாரில்லை.

எனக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு நான் எடுத்துக்காட்டாக இருந்தேன். அவர்கள் செலவுசெய்த விதம், பயணித்த விதம் என்பவற்றில் இருந்து நான் விலகி அவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தேன். விமானங்கள், ஹெலிகொப்டர் என்பன பாவித்த விதம் என்பவற்றை நிறுத்தி நான் 2015 ஆம் ஆண்டில் இருந்து எடுத்துக்காட்டாக இருந்தேன். ஆகவே மோதிக்கொள்ள சென்றால் எவ்வாறு காயம் ஏற்படும் எனத் தெரியாது. 1947 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் அரசாங்கங்கள் அதிகாரத்துக்கு வர ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு இடைநடுவே அந்த ஒத்துழைப்பு முறிந்து, அதன் விளைவுகள் கண்முன்னே உள்ளது. பண்டாரநாயக்க அரசாங்கம், ஜே.ஆர். அரசாங்கம், சந்திரிக்கா அரசாங்கம், 2014 ஆம் ஆண்டு என்னால் ராஜபக் ஷ அரசாங்கம் தோற்றது என்பவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே மூன்றில் இரண்டை தக்கவைக்கவும் அரசாங்கத்தை நடத்துவது குறித்தும் இதனை விட புத்திசாலித்தனமாக, ஆழமாக சிந்திக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கையில் தான் உள்ளது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ளுங்கள். நாம் அரசாங்கத்துக்குள் மோதிக்கொண்டால் அதன் விளைவு என்ன என்பதை இதற்கு 50முதல் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே அரசாங்கங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த அரசாங்கமும் கூட்டணி அரசாங்கம். பிரதான கட்சியுடன் 12 பங்காளிக்கட்சிகள் இணைந்துள்ளன. எம்மாலும் வேகமாக பேச முடியும்.மோத முடியாது தான். நாம் அப்பாவிகள். ஆனால் எமக்கு அரசியல் அறிவு, அனுபவம் உள்ளது. தமது தலைவரை தூக்கி வைக்க வேண்டும் என்பதற்காக கூறும் கதைகளை நாம் கண்டுகொள்ள மாட்டோம். அதற்காக எம்மை விமர்சிக்காது இருக்க வேண்டும். உங்களின் தலைவரின் அரசாங்கத்தில் தான் நாமும் உள்ளோம். எனவே அரசாங்கத்தில் குழப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். குத்துச்சண்டை வீரர்கள் நாமல்ல. நட்புறவை வைத்துக்கொள்வோம். நாமும் மோதிக்கொள்ளும் வேளையில் ஒரு தகுதியான பொருந்தக்கூடிய விதத்தில் பேச வேண்டும்.

எனது வீடு குறித்து பேசும்போது ஏனையவர்களின் வீடு குறித்தும் தெரிவிக்க வேண்டும். நான் எவ்வளவு விமானப் பயணங்களை மேற்கொண்டுள்ளேன், என்ன செய்துள்ளேன் என கூறுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா காரணமாக சகல மாநாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அனைத்துமே தொழில்நுட்ப ரீதியில் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. அதனால் சகல நாடுகளின் அரச தலைவர்களின் விமான பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே இப்போதுள்ள ஜனாதிபதியின் எடுத்துக்காட்டை நான் மதிக்கின்றேன். அதேபோல் இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு நான் எடுத்துக்காட்டாக இருந்துள்ளேன்.அதுமட்டுமல்ல, எனது பெயர் கூறாது நான் விவசாய ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ததாக கூறினீர்கள். யார் இவற்றையெல்லாம் உங்களுக்குக் கூறுகின்றனர். அதனை அறிந்துகொண்டு உங்களுக்கு தெரிந்தமாதிரி இங்கு கூறுகின்றீர்கள் என்பது எமக்கும் தெரியும். ஆனால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ஜனாதிபதிக்கு பொய் கூறினார். அமைச்சரவைக்கு பொய்களை கூறினார். பாராளுமன்றத்துக்கு பொய்களைக் கூறினார். மக்களுக்கு பொய்களை கூறினார். விவசாயிகளுக்கு பொய் கூறினார். நுகர்வோருக்கு பொய் கூறினார். இதனால் தான் விவசாயத்துறை பாரிய நெருக்கடிக்குள் வீழ்ந்து அரசாங்கம் தவறான பாதையில் சென்றது. இந்த காலகட்டத்தில் அரசாங்கம் பாரிய அவப்பெயரை சந்திக்க பிரதான காரணம் அமைச்சர் மஹிந்தானந்தவின் செயற்பாடும்,நடத்தையுமேயாகும். அதுதான் உங்களின் உருவ பொம்மையை எரிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. உங்களின் உருவ பொம்மையை நீங்களே தான் எரித்துக்கொண்டுள்ளீர்கள். மாறாக மக்கள் அல்ல.அரசாங்கமாக செயற்பாடுகளில் உண்மைகளை பேச வேண்டும். நீங்கள் பேசுகின்ற சகல நேரங்களிலும் என்னிடம் அறிக்கை உள்ளது, எம்மிடம் பொருட்கள் உள்ளன என கூறிக்கொள்வீர்கள்.எமக்கும் இவ்வாறு கூறிக்கொள்ள முடியும். கைவசம் பொருட்கள் உள்ளதென்றால் அதனை வெளியில் அனுப்பாது பதுக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லையே. இந்த நாட்டில் நீண்டகால அரசியல் அனுபவம் உள்ள நபர் என்ற விதத்தில் நான் கூறுவது என்னவென்றால் சகல விடயத்திலும் பொறுமையாக இருக்கும் நபர் நான். நாம் அரசாங்கமாக செயற்படும் வேளையில் அதற்கமைய நட்புறவுடன் இணைந்து செயற்படுவோம் என்றார்.

## பெண்களுக்கு...

(தொடர்ச்சி)

ஸ்டிகர் ஒட்டியவண்ணம் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்று சபைக்கு வருகை தந்திருந்தனர்.

பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஆளும் தரப்பு உறுப்பினர் திஸ்ஸ குட்டியாரச்சி வரவு செலவுத் திட்ட உரையின் போது பெண்களை அகௌரவப்படுத்தி பேசியிருந்தார் என்றும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டதுடன் பாராளுமன்ற பெண்கள் அமைப்பும் சபாநாயகரை சந்தித்து முறைப்பாடு செய்திருந்தது. அதன் பிரகாரம் சபாநாயகர் அதுதொடர்பில் தனது கண்டனத்தை தெரிவித்து நேற்று முன்தினம் அறிவிப்பு செய்தார்.

இருந்தபோதும் பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கும் வகையில் உரையாற்றிய குறித்த உறுப்பினர் அதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபையில் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டபோதும் சபாநாயகரும் அதுதொடர்பில் எந்த அறிவிப்பும் செய்யாததால், இன்று (நேற்று) சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் சர்வதேச தினத்தை நினைவுபடுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்து என்ற வாசகம் பொறித்த ஸ்டிகரை மேலாடையில் பொறித்தும் கையில் செம்மஞ்சள் நிர பட்டி கட்டிக் கொண்டும் சபைக்குள் வந்திருந்தனர்.

இதன்போது எதிர்க்கட்சி பிரதமகொறடா லக் ஷ்மன் கிரியெல்ல ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையில், பெண்களை அகௌரவப்படுத்தி இந்த சபையில் உரையாற்றிய உறுப்பினரின் கூற்று சாதாரணமானதல்ல. நீங்கள் அதனை கண்டித்திருந்தீர்கள். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்தது அதுவல்ல. அதனையும்விட கடுமையான தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். இந்த பாராளுமன்றத்தில் 32வருடங்களாக இருக்கின்றேன். இவ்வாறான மோசமான வார்த்தையை நாங்கள் கேட்டதில்லை. அதனால் சம்பந்தப்பட்ட உறுப்பினர் இதற்காக மன்னிப்புக்கோரவேண்டும். அதற்கு அவர் மறுத்துவிட்டால் அவருக்கு எதிராக தண்டனை ஒன்றை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

அத்துடன் இன்று (நேற்று) பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்கும் சர்வதேச தினமாகும். அவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு எதிராக வார்த்தை மூலம் வன்முறை இடம்பெற்றிருப்பது மிகவும் வெட்கப்படவேண்டிய செயல். ஐக்கிய நாடுகள் சபை மார்ச் மாதம் விடுத்திருக்கும் எமக்கு எதிரான பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டில் ஒன்றுதான், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக அரசாங்கம் பதில் வழங்குவதில்லை என்பதாகும். அதனால் இதனை சாதாரணமாக எடுக்கவேண்டாம். நீங்கள் இதுதொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இதனை சர்வதேசத்துக்கு கொண்டுசெல்ல வேண்டிவரும் என்றார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், இந்த விடயம் தொடர்பாக நான் தீர்ப்பொன்றை அறிவித்திருக்கின்றேன். கடந்த காலங்களிலும் இதனைவிட மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் இந்த சபையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அப்போதும் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்து, அந்த விடயத்தை நிறைவுசெய்தார்.

## சுதந்திரக்கட்சி...

(தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு நடப்பதே வேறு என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர அரசாங்கத்தை நேரடியாக எச்சரித்தனர். சுதந்திரக்கட்சியின் எச்சரிக்கையினால் சபையில் திக்குமுக்காடிய பொதுஜன முன்னணியினர் வாதிட முடியாது நின்றனர்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடிய வேளையில், ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான அரசாங்கத்தின் விமர்சனக் கருத்து குறித்து கூற்றொன்றை முன்வைக்க முயன்றார்.

இதன்போது அவர் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதியும் எமது கட்சியின் தலைவர் குறித்து ஏற்கனவே மோசமான கருத்துக்களை மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்தார். அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன மீண்டும் நேற்று அதனை கூறியிருந்தார். 3.7 பில்லியன் ரூபாவை முன்னாள் ஜனாதிபதி தனக்கு ஒதுக்கியிருந்தார் என நேற்றும் கூறியிருந்தார். இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதில் தெரிவிக்க வேண்டும் என சபையில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

எனினும் இதற்கு அனுமதி வழங்காத சபாநாயகர், ஏற்கனவே இது குறித்து பதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவின் உரையை நிறுத்தினார். எனினும் இதற்கு இணங்காத இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர சபையில் முரண்பட்டார்.

### தன்னை நியாயப்படுத்திய மைத்திரி

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன :

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தின் பின்னரான விவகாரத்தை கூறவே தயாசிறி ஜெயசேகர முயற்சித்தார். நீங்கள் கூறியதைப் போன்று கமத்தொழில் அமைச்சர் இந்த சபையில் முன்வைத்த காரணிகள் தொடர்பில் நான் பதில் தெரிவித்தேன். எனது பதிலின் பின்னரும் ஜனாதிபதிக்கான செலவீன தலைப்புக்கள் நிதி ஒதுக்கீட்டில் எனது காலத்தில் 200 வாகனங்களை பாவித்ததாகவும் அதேபோல் வருடாந்த செலவாக 3.5 பில்லியன் ஒதுக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார். இந்த குற்றச்சாட்டுகள் முற்றுமுழுதாக பொய்யான காரணிகளாகும். அதேபோல் தற்போதைய ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டையும் எனது ஆட்சிக்கால நிதி ஒதுக்கீட்டையும் ஒப்பிட்டு நான் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறினார். எனது காலத்தில் பாரிய 7 வேலைத்திட்டங்கள் எனது அமைச்சின் கீழ் இயங்கியது. அவை அதுவுமே இன்று இயங்கவில்லை. நானும் ஆளுந்தரப்பு உறுப்பினர், எனக்கு எதிராக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் தொடர்ச்சியாக இவ்வாறு பொய்யான பிரசாரம் செய்யக்கூடாது. நாமும் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகள். ஆகவே இதனை இனியும் நீடிக்க இடமளிக்க வேண்டாம் என சபை முதல்வரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

### தயாசிறியின் உரையை நிறுத்த முற்பட்ட சபாநாயகர்

இதன்போது இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மீண்டும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய போதும் சபாநாயகர் அதற்கு இடமளிக்கவில்லை. அதனால் குழப்பமடைந்த தயாசிறி, மீண்டும் மீண்டும் தனக்கான சிறப்புரிமையை கோரினார்.

### குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வேண்டாம் – சபாநாயகர்

இதன்போது பிரதான எதிர்க்கட்சியினரும் தயாசிறி ஜெயசேகரவுக்காக குரல் எழுப்பினர். தயவுசெய்து அவருக்கு ஒலிவாங்கியை வழங்குங்கள் என்றனர். இதனால் சினமடைந்த சபாநாயகர், "குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வேண்டாம்" என எதிர்க்கட்சியினரை பார்த்து கையை நீட்டி எச்சரித்தார்.

### மைத்திரியின் வேலைத்திட்டத்தில் ஒன்றேனும் இன்று ஜனாதிபதி முன்னெடுத்தாரா?

தயாசிறி ஜெயசேகரவின் தொடர்ச்சியான நச்சரிப்பை அடுத்து, ஐந்து நிமிடங்கள் மட்டுமே வழங்குவேன் எனக்கூறி தயாசிறி ஜெயசேகரவுக்கு ஒலிவாங்கியை வழங்கினார். இதன்போது கருத்து தெரிவித்த தயாசிறி ஜெயசேகர :

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் பாரிய வேலைத்திட்டங்கள் அவரது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதியின் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இவை செலவிடப்பட்டன. அதுமட்டுமல்ல அவர் முன்னெடுத்த வேலைத்திட்டங்களை அவதானித்தால், உணவு, மருத்துவத்துறை, விவசாயம்,நீர்ப்பாசனம்,சூழல் பாதுகாப்பு என்ற அவசியமான துறைகளுக்கு கடன்களையும் பெற்றுக்கொள்ளாது நிதி உதவிகளை கொண்டு இந்த வேலைத்திட்டங்களை கையாண்டார். அதுமட்டுமல்ல உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைகுழுவுக்கும் இந்த நிதியில் தான் ஒதுக்கப்பட்டது. இதில் ஏதேனும் ஒன்றையேனும் இன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா என அவதானிக்க வேண்டும்.

### அதிகார மோகத்தில் ஒரு சிலர்...

அதுமட்டுமல்ல, 1978 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் அரசியல் அமைப்பு 20 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றம் செய்த ஒவ்வொரு ஜனாதிபதியும் தமது அதிகாரத்தை தக்கவைக்க அல்லது மூன்றாம், நான்காம் தடவைகள் தமக்கான அதிகாரத்தை நீடிக்க நடவடிக்கை எடுத்தனர். ஆனால் 2015 ஆம் ஆண்டில் நாம் கூட விரும்பாத நிலையிலும் தனது நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கும் பிரதமருக்கும் கொடுத்தார். இன்றைய ஜனாதிபதி என்ன செய்கின்றார் என்பதை தெரிந்துகொண்டு பேசவர வேண்டும். நான் ஒன்றை கூறிக்கொள்கின்றேன், நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு தடவை அல்ல, இரண்டு அல்லது மூன்று தடவைகள் இதே குற்றச்சாட்டை முன்வைத்த அமைச்சர் மஹிந்தானந்த இனியாவது நிறுத்திக்கொண்டால் நல்லது.

### இனியும் சீண்டினால் நல்லதல்ல தயாசிறி அரசங்கத்துக்கு எச்சரிக்கை

இப்போது வரையில் நாம் பொறுத்துக்கொண்டுள்ளோம். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் 14 உறுப்பினர்களை கொண்டுள்ள கட்சியின் தலைவரை, முன்னாள் ஜனாதிபதிக்கு சேறு பூசும் செயற்பாடு இனியும் தொடர்ந்தால் எம்மால் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. மஹிந்தானந்த இப்போது குழி வெட்டுகின்றார். முன்னாள் ஜனாதிபதியின் செயற்பாடுகளை தாண்டி அதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதியின் குப்பைகளும் வெளிவரும்.அதன் விளைவு என்னவென வெளிப்படும். அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகள் என்ற ரீதியில் அரசாங்கத்தை பாதுகாக்க நாம் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை செயற்பட்டுள்ளோம். ஒரு சில காரணிகளில் ஏனையவர்களை போன்று நாமும் குரல் எழுப்பியுள்ளோம். மோத வேண்டுமென்றால் மோதுவோம். ஆனால் கட்சித் தலைவரை விமர்சித்தால் இறுதியாக பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டும் என எச்சரிக்கின்றேன் என ஆவேசமாக கருத்துக்களை பதிவிட்டார்.

### சபை முதல்வர் தினேஷ்

இதன்போது நிலைமைகளை சமாளிக்க முயற்சித்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கருத்து கூறுகையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாரதூரமான கருத்தை முன்வைத்தால் அதற்கு பதில் தெரிவிக்க முன்னர் உரிய உறுப்பினருக்கு அறிவித்தால் நல்லது. அப்போது குறித்த உறுப்பினர் தவறிழைத்திருந்தால் அதனை திருத்திக்கொள்ளவோ அல்லது அவரது காரணிகளை முன்வைக்கவோ ஏதுவாக அமையும். மைத்திரிபால சிறிசேன அவர்களின் பெயர் எந்த இடத்திலும் முன்வைக்கப்பட்டதாக நான் அறியவில்லை. ஜனாதிபதி செலவீனத்தலைப்புக்கள் குறித்த விவாதத்தில் முன்னரை விட தற்போது ஜனாதிபதியின் எடுத்துக்காட்டு குறித்தே பேசப்பட்டது. இது நியாயமான காரணிகளாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எந்த முரண்பாடுகளும் ஏற்படவில்லை. அவ்வாறான எண்ணப்பாட்டை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதையே நான் கூற முற்படுகின்றேன் என்றார்.

### மீண்டும் சர்ச்சையை ஆரம்பித்த அமைச்சர் அளுத்கமகே

இதன்போது சபாநாயகர், சர்ச்சையை நிறைவுக்கு கொண்டு வந்தார். இதனையடுத்து வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதம் ஆரம்பமானது. எதிர்க்கட்சியின் முதல் உரையை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆரம்பித்து வைத்தார். அவரது உரை முடிவுக்கு வந்த நேரத்தில் அவசரமாக சபைக்குள் வந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மீண்டும் சர்ச்சையை உருவாக்கினார்.

இதன்போது அவர் கூறுகையில் : நான் சபையில் இல்லாத நேரத்தில் என்னை மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்தது மட்டுமல்லாது, குழிகளைத் தோண்ட ஆரம்பித்தால் நாற்றம் வீசும் என தயாசிறி ஜெயசேகர கூறியுள்ளார். அதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். ஏனென்றால் அர்ஜுன் அலோசியஸ் வழங்கிய காசோலைகளும் வெளிவரும். நான் யாருடைய தனிப்பட்ட காரணிகளையும் விமர்சிக்கவில்லை. இரண்டு ஜனாதிபதிகளின் ஆட்சிக்காலத்தில் ஒரு ஒப்பீட்டையே முன்வைத்தேன்.

ஜனாதிபதியின் எடுத்துக்காட்டான செயற்பாட்டை சுட்டிக்காட்ட எமக்கு அதிகாரம் உள்ளது. இந்த செலவீன அறிக்கையை சபைப்படுத்துகின்றேன். அதேபோல் முன்னாள் ஜனாதிபதியின் மூன்று வீடுகள் குறித்த தகவல்களையும் சபைப்படுத்துகின்றேன். இது யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்க நினைக்கவில்லை. ஆனால் எம்மை தாக்கினால் நாமும் தாக்குவோம். நாம் முதுகெலும்பு இல்லாத நபர்கள் அல்ல. ஆனால் உண்மைகளை வெளிப்படுத்தாது அமைதியாக உள்ளோம். இவர்கள் எம்முடன் இருந்தாலும் ஒன்று, இல்லையென்றாலும் ஒன்றுதான். ஆகவே நாம் சண்டைக்குப்போக விரும்பவில்லை. நான் பேச ஆரம்பித்தால் எனது வாயில் இருந்து வேறு என்ன விடயங்கள் வெளிவரும் என தெரியவில்லை. அரசாங்கமாக நாம் செயற்படுவதென்றால் அனைவரும் ஒன்றாக நிற்க வேண்டும். ஆகவே நான் இத்துடன் நிறுத்திக்கொள்கின்றேன் என்றார்.

### கண்ணாடி வீடுகளில் இருந்துகொண்டு கல்வீச தயாரில்லை மைத்திரி பதிலடி

இதன்போது சபை அனுமதியைப் பெற்று கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன :

கண்ணாடி வீடுகளில் இருந்துகொண்டு கல் வீச நான் தயாரில்லை. எனக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கு நான் எடுத்துக்காட்டாக இருந்தேன். அவர்கள் செலவு செய்த விதம், பயணித்த விதம் என்பவற்றில் இருந்து நான் விலகி அவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தேன். விமானங்கள், ஹெலிகொப்டர் என்பன பாவித்த விதம் என்பவற்றை நிறுத்தி நான் 2015 ஆம் ஆண்டில் இருந்து எடுத்துக்காட்டாக இருந்தேன். ஆகவே மோதிக்கொள்ள சென்றால் எவ்வாறு காயம் ஏற்படும் என தெரியாது. 1947 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் அரசாங்கம் தாம் அதிகாரத்துக்கு வர ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு இடைநடுவே அந்த ஒத்துழைப்பு முறிந்து, அதன் விளைவுகள் கண்முன்னே உள்ளன. பண்டாரநாயக்க அரசாங்கம், ஜே.ஆர். அரசாங்கம், சந்திரிக்கா அரசாங்கம், 2014 ஆம் ஆண்டு என்னால் ராஜபக் ஷ அரசாங்கம் தோற்றமை என்பவற்றை குறிப்பிடலாம். ஆகவே மூன்றில் இரண்டை தக்கவைக்கவும் அரசாங்கத்தை நடத்துவது குறித்தும் இதனை விட புத்திசாலித்தனமாக ஆழமாக சிந்திக்க வேண்டும்.

### அரசாங்கத்தின் பெரும்பான்மை எமது கைகளில்

இந்த அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கையில் தான் உள்ளது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ளுங்கள். நாம் அரசாங்கத்துக்குள் மோதிக்கொண்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதை இதற்கு 50முதல் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே அரசாங்கங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த அரசாங்கமும் கூட்டணி அரசாங்கம், பிரதான கட்சியுடன் 12 பங்காளிக்கட்சிகள் இணைந்துள்ளன. எம்மாலும் வேகமாக பேச முடியும். ஆனால் எமக்கு அரசியல் அறிவு அனுபவம் உள்ளது. அரசாங்கத்தில் குழப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். குத்துச்சண்டை வீரர்கள் நாமல்ல, நட்புறவை வைத்துக் கொள்ளுவோம், நாமும் மோதிக்கொள்ளும் வேளையில் ஒரு தகுதியான பொருந்தக்கூடிய விதத்தில் பேச வேண்டும்.

### அரசாங்கம் பாரிய அவப்பெயரை சந்திக்க மஹிந்தானந்தவே காரணம்

அதுமட்டுமல்ல, எனது பெயர்கூறாது நான் விவசாய ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ததாக கூறினீர்கள். யார் இவற்றையெல்லாம் உங்களுக்கு கூறுகின்றனர். அதனை அறிந்துகொண்டு உங்களுக்கு தெரிந்தமாதிரி இங்கு கூறுகின்றீர்கள் என்பது எமக்கும் தெரியும். ஆனால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ஜனாதிபதிக்கு பொய்கூறினார், அமைச்சரவைக்கு பொய்களை கூறினார், பாராளுமன்றத்துக்கு பொய்களை கூறினார், மக்களுக்கு பொய்களை கூறினார், விவசாயிகளுக்கு பொய் கூறினார், நுகர்வோருக்கு பொய் கூறினார். இதனால் தான் விவசாயத்துறை பாரிய நெருக்கடிக்குள் வீழ்ந்து அரசாங்கம் தவறான பாதையில் சென்றது. இந்த காலகட்டத்தில் அரசாங்கம் பாரிய அவப்பெயரை சந்திக்க பிரதான காரணம் அமைச்சர் மஹிந்தானந்தவின் செயற்பாடும் நடத்தையுமேயாகும்.அதுதான் உங்களின் உருவ பொம்மையை எரிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. உங்களின் உருவ பொம்மையை நீங்களே தான் எரித்துக்கொண்டுள்ளீர்கள். மாறாக மக்கள் அல்ல என சரமாரியாக வார்த்தைகளில் தாக்கினார்.

### இதன்போது மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய அமைச்சர் மஹிந்தானந்த :

ஜனாதிபதியை திருப்திப்படுத்த நான் பொய் கூறவில்லை. அதேபோல் என்னால் தான் விவசாயத்துறை நாசமாகியதாக கூறினார். ஆனால் நான் அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்துடன் உள்ளேன். அதற்கமையவே செயற்படுகின்றேன். உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்தும் என்னால் கூற முடியும். நான் கூறுவதால் மைத்திரிபால சிறிசேனவுக்கு வலித்தால் அதற்கு நான் எதுவும் செய்ய முடியாது. கொள்கையுடன் நான் உள்ளே. நான் யாருடைய காலைவாரும் செயற்பாடுகளையும் செய்யவில்லை என்றார்.

### வேடிக்கை பார்த்த எதிர்க்கட்சிகள்

அரசாங்கத்தில் பிரதான இரண்டு கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட இந்த வார்த்தை மோதலின் காரணமாக பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட சகல எதிர்க்கட்சிகளும் சபையில் அமைதியாக நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன.

## சிறுபான்மை.... (தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு ஒருபோதும் சர்வதேசத்தினால் நிதி கிடைப்பதில்லை. அதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளுக்கு பதிலளிக்க தயாராகிக்கொண்டு செல்லவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

பொதுஜன பெரமுன ஆட்சிக்குவந்த அனைத்து காலங்களிலும் சர்வதேசத்துடன் பிரச்சினை ஏற்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றது. அது ஏன் என்று எமக்கு தெரியாது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த 2012, 2013, 2014 காலப்பகுதியில் தொடந்து மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் சபை எமக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்திருந்தது. 2015 இல் எமக்கு எதிராக பொருளாதார தடைவிதிக்க நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு வரும் நிலையிலேயே மஹிந்த ராஜபக்ஷ அவரது காட்சிக்காலத்து முன்னரே 2015 இல் ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றார். என்றாலும் அதில் நாங்கள் வெற்றிபெற்று, சர்வதேசத்தின் நன்மதிப்பை பெறும்வகையில் செயற்பட்டோம். அதனால் எமக்கு எதிரான தடை இல்லாமல்போனது.

ஆனால் தற்போதும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமும் மஹிந்த ராஜபக்ஷ சென்ற வழியிலேயே செல்கின்றது. இந்த அரசாங்கத்தின் முதலாவது வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை எமக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்தது. அதில் நாங்கள் பாரியளவில் தோல்வியடைந்தோம். மத்திய கிழக்கு நாடுகளும் எமக்கு எதிராக வாக்களித்திருந்தன. அதனால் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அடுத்த முறை மனித உரிமை பேரவைக்கு செல்லும்போது எமக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தவேண்டும். குறிப்பாக அவர்களின் குற்றச்சாட்டாக இருந்தது, சிவில் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரை நியமிப்பது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பிரேரணை அனுமதிக்கப்பட்ட பின்னர் நிறுவனங்களின் தலைவர்களாக அதிகம் நியமிக்கப்பட்டது இராணுவத்தினராகும். ஏனைய நாடுகள் கொவிட் கட்டுப்பாட்டு செயலணியின் தலைவர் வைத்தியர் ஒருவரை நியமிக்கும்போது எமது நாட்டில் இராணுவத் தளபதியே அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதனால் இதற்கு பதிலளிக்க தயாராகியே அடுத்த கூட்டத்துக்கு செல்லவேண்டும்.

அடுத்தவிடயம்தான் நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாக்கவேண்டும் என்பதாகும். புதிய அரசியலமைப்பினூடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றாவது அமைச்சர் மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவிக்கவேண்டும். சுயாதீன நீதிமன்றம் அமையாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது. இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக அரசாங்கத்தின் உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். அதில் நம்பிக்கை ஏற்படுவதில்லை.

அதேபோன்று சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளன. கொவிட் தொற்றுக்குள்ளாகி முஸ்லிம் இனத்தவர் ஒருவர் மரணித்தால் அந்த சடலத்தை 150 கிலோமீட்டருக்கு அப்பால் சென்றே அடக்கம் செய்யவேண்டி இருக்கிறது. இது அந்த சமூகத்துக்கு வழங்கும் தண்டனை. முஸ்லிம் மக்கள் பல நூறு வருடங்கள் எம்முடன் இணைந்து வந்தவர்கள். கண்டியில் இருக்கும் சில முஸ்லிம்களின் பெயரின் முதல் எழுத்து சிங்கள பெயராகவே இருக்கின்றது. எமது அரசாங்கத்தில் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை மதித்து நடப்பதை நாங்கள் உள்ளத்தால் காட்டி இருக்கின்றோம். குறிப்பாக தேசிய கீதத்தின் ஒரு பகுதியை நாங்கள் தமிழ் மொழியில் இசைத்தோம். அதன் மூலமே சர்வதேச சமூகத்துக்கு எம்மீது நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் சிறுபான்மை சமூகங்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும் அரசாங்கத்துக்கு ஒருபோதும் சர்வதேசத்தினால் நிதி கிடைப்பதில்லை. அதனை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

மேலும் யுத்தத்தில் மரணித்தவர்களை நினைவுகூரும் நடவடிக்கை சர்வதேச நாடுகளிலும் இடம்பெறுகின்றன. ஜே.வி.பி. கலவரத்தில் மரணித்தவர்கள் இன்றும் நினைவுகூரப்படுகின்றனர். அப்படியாயின் யுத்தத்தில் மரணித்தவர்களை தமிழ் மக்கள் நினைவுகூர நினைவுத்தூபி அமைப்பதை தடைசெய்வது, அவர்களை அச்சுறுத்துவதை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்திருக்கின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையில் திருப்தியில்லை என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருக்கின்றார். அதேபோன்று அதுதொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தெரிவு செய்யப்பட்டே நிறைவேற்றப்படுகின்றன. குற்றப்புலனாய்வுப் பிரிவில் சதித்திட்டம் இருப்பதாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருக்கின்றார். அவரின் கூற்று உண்மையாகும். ஏனெனில் தாக்குதல் இடம்பெறுவதற்கு 4நாட்களுக்கு முன்னரே அது தொடர்பான தகவல் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்திருந்தும் அதன் பிரதானி நிலந்த ஜயவர்தன, அதுதொடர்பில் ஜனாதிபதிக்கு தெரிவிக்கவில்லை என்றால் அது சதித்திட்டம் இல்லையா? ஆனால் தகவல் கிடைத்த முதலாவது நபர் இன்று சாட்சியாளராகி இருக்கிறார். நிலந்த ஜயவர்தனவுக்கு வழக்கு தொடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கின்றது. அதனை செய்வதில்லை. அதேபோன்று பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கின்றது. அவர்கள் தெரிவித்திருப்பது நியாயமானது. ஏனெனில் கைதுசெய்யப்படுபவரை 24மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவேண்டும் என தெரிவிக்கின்றனர். அதேபோன்று தடுப்புக்காவலின் கட்டளையில் 19 மாதங்கள் தடுத்துவைக்கலாம். அதனை குறைக்குமாறே தெரிவிக்கின்றனர். இந்த திருத்தங்களை கொண்டுவந்தால், அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. அதனால் எமது கடன் தவணைகளை நீடித்துக்கொள்ள சர்வதேசத்துடன் கலந்துரையாட வேண்டும். இந்த நிலை நீடித்தால் மார்ச் மாதமாகும்போது சிவில் யுத்தம் ஒன்று ஏற்படும் என்றார்.


# மிகச்சிறந்த Black Friday அனுபவத்தைப் பெற்றிட Colombo City Centre வாருங்கள்




மிகச்சிறந்த Black Friday அனுபவத்தைப் பெற்றிட Colombo City Centre வாருங்கள். Colombo City Centreக்கு வரும் வாடிக்கையாளர்கள் அனைரும் மிகச்சிறந்த ஷொப்பிங் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் அதேநேரம், அவர்களுக்கு பிரத்தியேக நிகழ்வுகளில் பங்கேற்கக்கூடிய Black Friday ஊக்குவிப்புத் திட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன. இதற்கமைவாக, Colombo City Centre இல் நீங்கள் விரும்பியவாறு ஷொப்பிங் செய்யவும், அனுபவிக்கவும் Black Friday சலுகைகளை கை நிறைய பெற்றுக்கொள்ளவும் முடியும்.

நீங்கள் ரூ.9,999/- இற்கு அதிகமான தொகையில் கொள்வனவு செய்யும் போது வாகன தரிப்பிட கட்டணம் அறவிடப் படமாட்டாது. அதேபோல் ரூ.15,000/- இற்கு அதிகமான தொகையில் கொள்வனவு செய்யும் போது CCC யின் பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். மேலும், ரூ.15,000/- முதல் 19,000/- வரையான கொள்வனவுகளுக்கு ரூ.500/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.20,000/- முதல் 24,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.1000/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.25,000/- முதல் 29,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.1500/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.30,000/- முதல் 34,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.2000/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.35,000/- முதல் 39,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.2500/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.40,000/- முதல் 44,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.3000/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். ரூ.45,000/- முதல் 49,999/- பெறுமதியான கொள்வனவுகளுக்கு ரூ.3500/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படும். இதற்காக நீங்கள் 2021 நவம்பர் 26ஆம் திகதிக்கான சகல பில்களையும் விசாரணை கவுண்டரில் சமர்ப்பித்து CCC Black Friday சலுகைக்கான அன்பளிப்பு வவுச்சர்களை பெற்றுக் கொள்ளுங்கள். ரூ.50,000/- இற்கும் அதிகமாக செலவு செய்த வாடிக்கையாளர்களுக்கு CCC Black Friday Special Bonanza சலுகை வழங்கப்படும். இதன்போது ரூ.50,000/- பெறுமதியான CCC அன்பளிப்பு வவுச்சர் சிறப்பு சீட்டிழுப்பின் மூலம் வழங்கப்படும். Black Friday கொடுப்பனவின் போது இந்த சிறப்பு சலுகைகளுக்கு மேலதிகமாக CCC வரும் வாடிக்கையாளர்களுக்கு என்றும் மறக்கமுடியாத ஷொப்பிங் அனுபவத்தை வழங்கும் நோக்கில் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில், காலை முதல் பல்வேறு இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள், மாலை சிறுவர்களுக்கான மெஜிக் போட்டிகள் மற்றும் இரவு இசைக்கச்சேரி ஆகிய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஷொப்பிங் செய்வதற்கும், உங்களுக்கு விருப்பமான உணவுகளை உண்ணுவதற்கும், நீங்கள் விரும்பிய பொழுதுபோக்கு அம்சங்களை அனுபவிப்பதற்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான ஒரே இடமாக Colombo City Centre சுட்டிக்காட்ட முடியும். ஷொப்பிங் செய்வதற்கு மிகச்சிறந்த சூப்பர் மார்கெட்டுகள், பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கு Bowling மற்றும் Gaming Arcade, உங்களுக்குத் தேவையான சுவைக்கேற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உணவுகளை உண்ணக் கூடிய உணவகங்கள் உங்களுக்காக தயார் செய்யப்பட்டுள்ளன. Colombo City Centre இன் Black Friday நிகழ்ச்சித்திட்டம் 2021 நவம்பர் 26ஆம் திகதி மு.ப. 8.00 மணி முதல் நள்ளிரவு வரை இது நடைபெறும். உங்களுக்கு இந்த வருடத்தின் மிகச்சிறந்த ஷொப்பிங் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள இன்றே உங்களுக்கான தினத்தை முன்பதிவு செய்திடுங்கள். மேலதிக விபரங்களுக்கு Colombo City Centre இன் Facebook மற்றும் Instagram பக்கங்களுக்கு வாருங்கள். உங்கள் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்களோடு Colombo City Centre இல் நடைபெறும் Black Friday நிகழ்வில் ஷொப்பிங் செய்து சலுகைகளை பெற்று மகிழுங்கள்.


## மைத்திரியின்... (தொடர்ச்சி)

ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை அடுத்து, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயுடன் சமரச பேச்சுவார்த்தையில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வாவும் பிரசன்ன ரணதுங்கவும் ஈடுபட்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோபமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆவேசமும் நியாயமானது என சிரேஷ்ட அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டனராம்.

பாராளுமன்றத்தில் நேற்று காலையில் ஆளுந்தரப்புக்குள் பாரிய வாக்குவாதம் ஏற்பட்டதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தை கடுமையாக எச்சரித்ததுடன் பெரும்பான்மையை பலவீனப்படுத்தும் அபாய எச்சரிக்கையை சபையில் விடுத்தார். இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் சபையில் இருந்தும் அவர்கள் எவருமே எதிர்த்து கருத்து முன்வைக்காது அமைதியாக இருந்தனர். இந்நிலையில் மைத்திரிபால சிறிசேனவின் உரையை அடுத்து அவர் சபையை விட்டு வெளியேறும் வேளையில், குறுக்கிட்ட சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சமாதானப்படுத்தியுள்ளார். அவருடன் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கூட இருந்துள்ளதுடன், அரசாங்கத்துக்குள் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் குறித்து இணக்கப்பாட்டுக்கு வருமாறும் கூறியுள்ளனர். தொடர்ச்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தன்னையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஆளுந்தரப்பு பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் விமர்சித்தபோதும் தான் அமைதி காத்ததாகவும் எனினும் பொய்களுக்கும் ஒரு எல்லை உண்டு என்பதையும் கோபத்துடன் தெரிவித்துவிட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார். இந்நிலையில் நேற்று பிற்பகல் வேளையில் சபைக்குள் அமர்ந்திருந்த மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் வந்த அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, அவரது செயற்பாடுகள் குறித்தும் தவறான விமர்சனங்கள் குறித்தும் எடுத்துக்கூறியுள்ளார். நீண்ட நேரமாக இருவரும் உரையாடிக்கொண்டிருந்த வேளையில், அவ்விடத்துக்கு வந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இந்த பிரச்சினையை தொடர வேண்டாம் என வலியுறுத்தியுள்ளார்.

இவர்களின் பேச்சுவார்த்தை இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் பிற்பகல் 4.20 மணியளவில் சபைக்குள் வந்த அமைச்சர் உதய கம்மன்பில நேரடியாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் வந்து தனது தலையில் அடித்துக்கொண்டவாறு அவரது உரை குறித்து கேள்வி எழுப்பியதை சபையில் அவதானிக்க முடிந்தது. இது குறித்து கேசரிக்கு சில கருத்துக்களை பகிர்ந்துகொண்ட அமைச்சர்கள்: ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கோபமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆவேசமும் நியாயமானது என்ற கருத்துக்களையே கூறியிருந்தனர்.

## இந்தியாவை... (தொடர்ச்சி)

இந்தியாவின் பங்களிப்பு அவசியமாகும். இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகிறது என்பதையும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு அமைச்சு, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டின் வெளிவிவகார கொள்கையில் முதலில் தேசிய வேலைத்திட்டம் உள்வாங்கப்படுவது அவசியமானது. இலங்கை அந்த விடயத்தில் தம்மை உண்மையென நிரூபித்து வருகின்றது. அது எப்படியென்றால் இலங்கையில் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பௌத்த, சிங்கள கொள்கையில் பயணித்து, சிங்கள பௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தவே முயற்சித்துள்ளனர். இலங்கை சிங்கள பௌத்த கொள்கைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்குமென வெளிப்படுத்தி வருகின்றனர். சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை மிக வேகமாக சிங்கள பௌத்த அடியெடுத்து வைத்தது. அதன் விளைவாக உள்நாட்டிலேயே எதிரிகளை உருவாக்கிக்கொண்டது. தமிழர்கள் பிரதான இலக்காகியதுடன் இன்று முஸ்லிம், கிறிஸ்தவர்களும் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொள்கையில் அரசாங்கம் பயணிக்கின்ற வேளையில் அதன் வெளிப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என்றால், இந்நாட்டின் தமிழர்கள், தென்னிந்திய தமிழர்களுடன் இணையும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்கிறது என்ற நோக்கத்தில் பார்க்கும் மனநிலையும் உருவாக்கப்பட்டது. இதனால் இந்தியாவையும் எதிரிகள் என நினைக்கும் நிலை ஆரம்பத்திலேயே உருவாகிவிட்டது. ஆகவே இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமான கொள்கைகளையே இலங்கை எப்போதும் வகுத்து வந்துள்ளது. ஒவ்வொரு அரசாங்கமும் இதே கொள்கையில் தான் பயணித்துக்கொண்டுள்ளது. இதுதான் உண்மையாகும்.

80களில் ஜெயவர்தன அரசாங்கத்தின் காலத்தில், உலக பனிப்போர் காலத்தில் இந்தியா ரஷ்யாவுடன் நெருக்கமாக உறவை பின்பற்றிய சூழ்நிலையில், இலங்கை அமெரிக்காவுடன் இணைந்து இந்தியாவை வெறுப்பேற்றும் வேலையை செய்தது. இதன் விளைவு எவ்வாறாக அமைந்தது என்றால், இந்தியா தலையிட்டு இலங்கையை அமெரிக்காவுடன் நெருக்கமாக பயணிக்க வேண்டாம் என வலியுறுத்தும் நிலைமை ஏற்பட்டது. பின்னர் பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் நிலைமைகள் மாறின.

ஆனால் இன்று மீண்டும் நிலைமைகள் மாற்றமடைந்து வருகின்றன. வல்லரசாக சீனா ஆக்கிரமித்து வருகின்ற நிலையில், இலங்கை மீண்டும் சிங்கள பௌத்த கொள்கையை கையில் எடுத்துக்கொண்டு தமது அதிகாரத்தை கையில் வைத்துக்கொள்ள சீனாவுடன் நெருக்கத்தை கையாண்டு வருகின்றது. இது சீனாவின் நலனுக்காக அவர்கள் நாட்டுக்குள் ஊடுருவவும் இடமளித்துள்ளது. சீனாவும் இதனை உறுதிப்படுத்திக்கொண்டு இலங்கையில் அவர்களின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது பூகோள அரசியலில் பாரிய நெருக்கடியை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ளது.

வல்லரசுகளான இந்தியா, சீனா, அமெரிக்காவை நாட்டுக்குள் இடமளித்து நெருக்கடிக்குள் விழுந்துள்ளது. ஆனால் இந்த பூகோள அரசியலை இலங்கை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் அதற்கு முதலில் உள்நாட்டு கொள்கையில் மாற்றங்களை செய்தாக வேண்டும். அதன் மூலமாக நமது நலனுக்காக வல்லரசுகளை பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் நாம் அவ்வாறான வெளிப்படை கண்ணோட்டத்தில் பார்க்க மாட்டோமே, சிங்கள பௌத்த பேரினவாதத்தையே ஆட்சியாளர்கள் கையில் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் சிங்கள பௌத்த வாக்குகளில் ஆட்சிக்கு வந்ததாக கொண்டாடிக்கொண்டுள்ளனர். இது வெட்கப்பட வேண்டிய செயற்பாடு. ஒரே நாடு, ஒரே சட்டம் எனக்கூறி நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு அடிப்படைவாதியான ஞானசார தேரரை நியமித்துள்ளீர்கள், பல செயலணிகளில் இராணுவத்தை உள்நுழைத்துள்ளீர்கள். இந்த கொள்கை ஒருபோதும் நலன்களுக்கு கைகொடுக்காது.

அரசியல் நிலைப்பாட்டில் எதுவாக இருந்தாலும் ஜி.எல்.பீரிஸ் குறித்து தனிப்பட்ட மரியாதையை நாம் கொண்டுள்ளோம். சட்ட வல்லுனராக மிகப்பெரிய மதிப்பை கொண்டுள்ளேன். ஆனால் இப்போது அவர் வெளிவிவகார அமைச்சராக இத்தாலியில் அவர் கூறிய சில விடயங்களை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அதே மாநாட்டில் அவ்வாறான கருத்தை முன்வைத்தார். அவரது கொள்கை அதுவாகவே இருக்கும் என்பதில் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நீங்களும் இந்த நாட்டில் பல்லின சமூகம், மத கலாசார அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென கூறியது மிகப்பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியது. இது அவரது நிலைப்பாடாக இருக்கக் கூடாது. சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியில் இருக்கின்றோம் என அவரும் கூறுவது மதிப்புக்குரிய விடயம் அல்ல.

இன்று நாம் பல்வேறு பிரச்சினைகளில் சறுக்கிக் கொண்டே உள்ளோம். இவ்வாறான நிலையில் உங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாத வரையில், பூகோள அரசியலில் வெற்றிகொள்ள முடியாது. குறிப்பாக இந்த வலயத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம். அவர்களும் இங்கு வேறு வல்லரசுகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் ஒரே நாடாக தாம் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகின்றது.

இந்தியாவை சமாளிக்கலாம் என நீங்கள் நினைத்தால் அதற்கு ஏனைய வல்லரசுகளுக்கு சில பகுதிகளையும் இந்தியாவுக்கு சில பகுதிகளையும் வழங்கலாம் என நீங்கள் கருதினால் அது ஒருபோதும் வெற்றிபெறாது. இதற்கு எமக்கு இருக்கும் ஒரே வழிமுறை, இலங்கையின் பன்மைவாத நாடாகவும் தேசிய கொள்கையை மாற்றிக்கொள்வதும் புதிய அரசியல் அமைப்பின் மூலமாக அதனை உறுதிப்படுத்துவதும் மட்டுமேயாகும். பிரிவுகளுக்கு இடமளிக்காது பூகோள அரசியலை கையாளுவதுமே சகலருக்கும் சாதகமாக அமையும். எனவே வெளிவிவகார அமைச்சர் உங்களின் தனிப்பட்ட ஆதிக்கத்தை கொண்டேனும் இதனை மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

## ஜனாதிபதி... (தொடர்ச்சி)

எடுக்க முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கத்திடம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

களனி கல்யாணி பொன் நுழைவாயிலை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்கு முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக கடந்த அரசாங்கம் நியமித்திருந்த ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அவ்வாணைக்குழுவின் பரிந்துரைகள், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, தொடர் நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றிடமும் கையளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ள குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நிறைவேற்ற முடியும்.

அதற்கு அவசியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கத்துக்கு உள்ளது. அதனால் கோரிக்கைகளை முன்வைக்கும்போது கவனமாக இருக்குமாறும் மக்களை ஏமாற்ற வேண்டாமென்றும் எதிர்க்கட்சியினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

2005 – 2010 மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டின் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்குமான நிலையான தீர்வு பெற்றுத் தரப்படும். கொவிட் தொற்றுப் பரவல் காலத்திலும் கூட, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவையனைத்தையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம். எதிர்காலத்தில் நாட்டை மூடவேண்டிய நிலைமை ஏற்படாதிருப்பின் உறுதியளிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் நிறைவு செய்ய முடியும் என்றார்.


### கேள்வி கோரல்
### பாதுகாப்பு சேவை வழங்கல்
### அட்டன் டிக்கோயா நகரசபை

2022-01-01ஆம் திகதி தொடக்கம் 2022-12-31ஆம் திகதி வரையில் எமது நிறுவனத்திற்கான பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்படிவங்கள் தகுதிவாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றது.

-கேள்விப்படிவங்கள் 2021-11-26 மு.ப.9.00 தொடக்கம் 2021-12-09 பி.ப.2.30 வரையில் அலுவலக நாட்களில் கேள்வி பிணை வைப்புத் தொகையாக ரூ.25,000.00ம் மற்றும் மீளச்செலுத்தப்படாத ரூ.250.00 படிவக் கட்டணத்தையும் செலுத்தி கேள்வி விண்ணப்ப படிவங்களை எமது நகரசபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

-குறித்த படிவத்தை உரியவாறு பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேற்புற மூலையில் **"பாதுகாப்பு சேவை வழங்கல் 2022 ம் ஆண்டு"** எனக் குறிப்பிட்டு, **"தலைவர் அட்டன் டிக்கோயா நகரசபை"** எனும் முகவரிக்கு 2021-12-10ம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு தபால் மூல மாகவோ அல்லது நேரில் கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் இடலாம்.

- முத்திரையிடப்பட்ட கேள்விப்படிவங்கள் 2021-12-10ம் திகதி மு.ப.10.30 மணிக்கு கேள்விக் குழுவினால் திறக்கப்படும்.
- கேள்விக் குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்கு: தொ.பே.- 051-2222275

எஸ்.பாலச்சந்திரன்,
தலைவர், அட்டன் டிக்கோயா நகரசபை.
25.11.2021

## நெதர்லாந்து...

(தொடர்ச்சி)

நெதர்லாந்து தூதரகத்தினால் நேற்றைய தினம் (வியாழக்கிழமை) 'ஒரேன்ஞ் த வேல்ட்' என்ற பிரசாரம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் மூன்று பெண்களில் ஒருவர் என்ற அடிப்படையில் பெண்கள் தமது வாழ்நாளில் உடலியல் அல்லது பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றார்கள். எனவே இத்தகைய பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச ரீதியில் 'ஒரேன்ஞ் த வேல்ட்' என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஓரங்கமாகவே இலங்கையிலுள்ள நெதர்லாந்து தூதரகத்தினால் நேற்றைய தினம் ஒரேன்ஞ் த வேல்ட் பாலின ரீதியான வன்முறைகளுக்கு எதிரான 16 நாட்கள் என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அப்பிரசாரத்தின்படி 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்போம்' என்று ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறு சைக்கிளில் பயணித்த இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் தன்ஜா கொன்க்ரிஜ்ப், கொழும்பிலுள்ள ஏனைய தூதரகங்கள் மற்றும் சர்வதேச கட்டமைப்புக்களின் அலுவலகங்களுக்கு சென்று அவற்றின் முகப்பில் மேற்படி பதாகையைக் காட்சிப்படுத்தினார். அவருடன் தூதரக அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து கொண்டனர்.

நெதர்லாந்து தூதரகத்தினால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி பிரசாரத்தின்கீழ் 'பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்போம்' என்ற பதாகை இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம், கனேடியத் தூதரகம்,பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம், பிரான்ஸ் தூதரகம் மற்றும் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் ஆகியவற்றின் முன்றலில் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# வீரகேசரி சிறுவிளம்பரங்கள்

### ஜோதிடம்

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஐயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

### சேவை

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

### சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

### சேவை

புதிய வீடு கட்டவோ அல்லது பழைய வீட்டினை புதிய வடிவில் மாற்றவோ குறைந்த விலையில் தரமான வேலைத் திட்டம் House Repairing, Crack Work, Painting work, Building Water Proofing, Tiles work சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 077 3684515 - 075 2903135

### தேவை

ஹோமாகம, பணாகொடை Templeburg industrial இல் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பயிற்சியுள்ள / பயிற்சியற்ற பணியாளர்கள் உற்பத்தி பிரிவுக்கு தேவை. 18 - 32 வயதுக் குட்பட்டவர், சிறந்த சம்பளம் மற்றும் சலுகைகள். தொடர்புகளுக்கு - 077 8869803

### தேவை

வத்தளையில் அமைந்துள்ள சைனீஸ் பார் என்ட் ரெஸ்டூரண்ட் நிறுவனத்திற்கு 50 வயதிற்கு குறைந்த திறமையான அனுபவமுள்ள சைனீஸ்/ தாய் உணவுகள் செய்வதற்கு Cook தேவை. சம்பளம் 3000/= - 1500/= இற்கிடையில். 077 3209896, 075 1612646

### தேவை

வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிரபல்யமான சல்வார் காட்சியறைக்கு விற்பனைத்துறையில் முன்னனுபவமுள்ள Sales Girls உடனடியாக தொடர்பு கொள்ளவும். (வயதெல்லை 20 - 32), சம்பளம் 28,500/= - 31,000/= வரை வழங்கப்படும். 011 2367778, 011 594 5994, 076 9665011

### தேவை

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு 35 வயதிற்கு குறைந்த காசாளர் தேவை. 077 3409108, 077 7340748

### தேவை

கொழும்பிலுள்ள எங்களது தொழிற்சாலையில் மாதம் 40,000/= - 60,000/= வரை சம்பளத்துடன் வேலைவாய்ப்பு நாள், கிழமையடிப்படையிலும் சம்பளம் வழங்கப்படும். உடன் ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்புகளுக்கு - 076 4217228, 075 3270182, 077 8672816, 072 8684986

### தேவை

பத்தரமுல்ல உணவகமொன்றுக்கு ப்ரைட் ரைஸ், சென்விச், பர்கர் போடுவதற்கு கோக்கிமார் மற்றும் அனுபவமுள்ளவர்கள் தேவை. 077 3409108, 077 7340748

### தேவை

பஸ்யால பிரதேசத்தில் உள்ள முட்டை உற்பத்தி செய்யும் பாம்க்கு ஆண்/ பெண் வயது 30 - 55 வரை அடிப்படை சம்பளம் 35,000/= மேல். மேலதிக தகவல்களுக்கு: 077 7355722, 071 1442816

### தேவை

Wanted Part-time Accounts & Correspondence clerk (9.30am - 12.30pm). Minimum G.C.E. O/L with good knowledge of English and computer literacy. Must be resident in Colombo or suburb. Previous work experience an advantage. Please send your Bio-data to Email:- unifoods@sltnet.lk or mail to Orient Trading Company, 95, 2nd Floor, Galle Road, Colombo - 04.

### வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு (Attached Bathroom) 1500/= முதல். ராமகிருஷ்ணா பெற் றோல் செட் அருகில். 077 7967878

### வீடு/ காணி விற்பனைக்கு

தெஹிவளை Marine Drive இல் Barracuda Restaurant முன்பாக அழகிய கடல் முகப்புடன் 6 ஆம் மாடியில் 2 படுக்கையறைகள், 1 குளியலறை, 2 Lifts, Gym சகல வீட்டு உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Shegar: 077 1434343. விலை - 19.5 மில்லியன்

### வாடகைக்கு

Full Seaview 1, 2, 3 படுக்கையறைகள் நாள், கிழமை, மாத, வருட வாடகைக்கு. Full Furnished, சமையலறை உபகரணங்கள், Washing Machine, Fridge, Hot Water, Private Car Park, Security. தொடர்பு: Euro Homes Shiva 077 1434343

### தேவை

கிரில் கேட், கைப்பிடிகள், கூரை மற்றும் சகல வெல்டிங் வேலைகள் தெரிந்த திறமையான வெல்டர்ஸ் தேவை. 071 1571831

### தேவை

பேக்கரிக்கு கறி செய்ய ஆள் தேவை. வயது 25 - 40 வரை. சம்பளம் 1800/= சாப்பாட்டுக்கு 400/= தங்குமிடமும் வழங்கப்படும். தொடர்புகொள்ளவும். 076 2658003

### வீடு வாடகைக்கு

நுகேகொடையில் 4 படுக்கையறையுள்ள மேல் மாடி வீடு வாடகைக்கு. 1 ரூம் A/C, 3 பாத்ரூம் உடன் அனைத்து வசதிகளும். மாதம் 60,000/=. 077 4751 863, 076 1173438, 076 9193237

### கல்வி

கொழும்பில் தரம் 9, 10, 11 மற்றும் A/L மாணவர்களுக்கான Maths & Science வகுப்புக்கள் தனி / குழு ரீதியாக அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும். தொடர்பு இல. 077 8628683

### காணி விற்பனைக்கு

கல்கிசையில் காலி வீதிக்கு அருகாமையில் பாதுகாப்பான நல்ல சூழலில் 10P காணி விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 3556574

### வீடு குத்தகைக்கு

கொட்டாஞ்சேனை வித்தியாலய வீதியில் 17 ஆவது ஒழுங்கையில் இல.10, 10 1/1, இல.12 1/1 வீடு குத்தகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு - 070 184 6958 இற்கு அழைக்கவும்.



நம்பகத்தன்மையான நடைமுறை தகவல்கள் துரிதமான விபரங்களுடன்

www.virakesari.lk

உடனுக்குடன் அறிந்திடுங்கள்..!


# கேள்வி அறிவித்தல்
# அட்டன் டிக்கோயா நகரசபை.

இந்நகரசபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்பட்ட 01.02.03 மற்றும் 04 ஆகிய ஆதனங்களுக்காக 01-01-2022ம் திகதி தொடக்கம் 31-12-2022ஆம் திகதி வரையான காலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்படிவங்கள் 10.12.2021 ஆம் திகதி மு.ப.10.00 மணி வரையில் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் 10.12.2021 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு நகரசபைக் கூட்ட மண்டபத்தில் கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

01. மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி கடையறைகளை 2022 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்கல்.
02. பொது மலசலக்கூடங்களை 2022ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்கல்.
03. 2022 ஆம் ஆண்டிற்கு வாகன தரிப்பிட கட்டணத்தை அறவிடுவதற்காக கேள்விக்கோரல்.
04. டன்பார் மைதானத்தில் அமைந்துள்ள கட்டடத்தை உடற்பயிற்சிக்கூடமாக நடாத்திச்செல்வதற்காக 2022 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குதல்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புத்தொகை மற்றும் கேள்விப்படிவக்கட்டணம் என்பனவற்றை செலுத்திய பின்னர் 26.11.2021 ஆம் திகதி மு.ப 9.00 தொடக்கம் 09.12.2021 ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரையில் அட்டன் டிக்கோயா நகரசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் விநியோகிக்கப்படும்.

01. தவறிழைத்தோர் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் மற்றும் நடப்பாண்டில் 01.02.03 மற்றும் 04 ஆகியவற்றிற்கான குத்தகை நிலுவை செலுத்தாதுள்ளோர் போன்ற எவருக்கும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.
02. **ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக செயற்பட தவறும் பட்சத்தில் அவரது பிணை வைப்புத்தொகை சபை வசமாக்கப்படுவதுடன். கேள்வி தொடர்பில் தவறிழைத்த நபராக கருதி அவர் தவறிழைத்தோர் பட்டியலில் (விரும்பத்தகாதோர் பட்டியலில்). அவரது பெயர் சேர்க்கப்படும்.**
03. கேள்வி விண்ணப்பப்படிவத்தை இடும் தபாலுறையில் "01. 02. 03. 04 ............ 2022ம் வருடத்திற்கு குத்தகைக்கு பெறல்" என இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து காரியாலயத்தின் கேள்வி பெட்டியில் இட வேண்டும்.
04. இல.01 கடைக்காக ஹட்டன் டிக்கோயா நகரசபையினால் விலங்கறுமனை வழங்கப்படமாட்டாது.
05. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.
06. இலக்கம் 01 மற்றும் 04 இற்காக மாதாந்தம் செலுத்த வேண்டிய கேள்வித்தொகையை அனைத்து மாதங்களிலும் வேலை செய்யும் இறுதி தினத்துக்கு முன்னர் செலுத்தாவிட்டால் அதற்காக 10% வீத தண்டப்பணத்தை செலுத்த வேண்டும்.
07. இலக்கம் 02 மற்றும் 03 இற்காக அனைத்து வாரங்களினதும் கேள்வித் தொகையை அடுத்து வரும் வாரத்தின் திங்கட்கிழமை அல்லது வேலை நாட்களின் முதலாவது தினத்தில் நகரசபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த தாங்கள் தவறுமிடத்து அதற்காக அந்த கேள்வித் தொகைக்கு 10% வீத தண்டப்பணம் செலுத்த வேண்டும்.
08. இலக்கம் 02 இற்காக நபர் ஒருவரிடமிருந்து அறவிடத்தக்க ஆகக்கூடிய கட்டணம் ரூ.10.00 ஆகும்.
09. மேற்படி இலக்கம் 02 மற்றும் 03 இற்கான கேள்வித்தொகைக்கு மேலதிமாக பணம் அறவிடுவது தொடர்பாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடு கிடைத்தால். எவ்வித அறிவித்தலுமின்றி ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
10. இந்நகரசபையில் சேவை புரியும் எவருக்கும் கேள்விப்படிவம் விநியோகிக்கப்படமாட்டாது.
11. கீழ்க்குறிப்பிட்ட கேள்விப்படிவ கட்டணத்திற்காகவும் நீங்கள் முன்வைக்கும் கேள்வித்தொகைக்கும் அரசினால் விதிக்கப்படும் வரித்தொகையை செலுத்த வேண்டும்.
12. கேள்விக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

01. மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சிக்கடை

| கடையறை இலக்கம் | கேள்வி பிணைவைப்பு தொகை (ரூ) | மீளச்செலுத்தப்படாத கேள்விப்படிவ கட்டணம் (ரூ) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) |
|---|---|---|---|
| அட்டன் பொதுச்சந்தை இல 11 கொண்ட ஆட்டிறைச்சி கடை மற்றும் டிக்கோயா பொதுச்சந்தை 390/A ஆட்டிறைச்சி கடை | 50,000.00 | 2,000.00 | 808,500.00 |
| அட்டன் பொதுச்ந்தை 13 ஆம் இலக்க மாட்டிறைச்சி கடை | 250,000.00 | 5,000.00 | 5,197,500.00 |
| அட்டன் பொதுச்சந்தை 14 ஆம் இலக்க மாட்டிறைச்சிக்கடை | 250,000.00 | 5,000.00 | 5,197,500.00 |
| டிக்கோயா பொதுச்சந்தை இல. 390B மாட்டிறைச்சி கடை | 100,000.00 | 2,500.00 | 2,021,250.00 |

02. பொதுமலசலக்கூடம்.

| மலசலக்கூடம் அமைந்துள்ள இடம் | கேள்வி பிணை வைப்புத்தொகை | மீளச்செலுத்தப்படாத கேள்விப்படிவ கட்டணம் (ரூ) | ஒரு வாரகாலத்திற்கான ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) |
|---|---|---|---|
| அட்டன் நகரம் | | | |
| பஸ்தரிப்பிட பொது மலசலக்கூடம் | 25,000.00 | 2,000.00 | 90,000.00 |
| நட்சத்திர சதுக்கம் | 15,000.00 | 750.00 | 8,000.00 |

03. வாகன நிறுத்துமிட கட்டண அறவிடல்.

| வாகன தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் | கேள்வி பிணை வைப்புத்தொகை | மீளச் செலுத்தப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (ரூ) | ஒரு வாரகாலத்திற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூ) |
|---|---|---|---|
| அம்பிகா சந்தி தொடக்கம் புகையிரத நிலையத்திற்கு செல்லும் பாலம் வரையிலான பிரதான வீதியின் இரு மருங்கிலும் (நகரசபையினால் அடையாளமிடப்பட்ட முச்சக்கரவண்டி, வேன் வண்டி நிறுத்துவதற்கான இடங்கள் தவிர) | | | |
| சிட்டி பிளாசா தொடக்கம் பஸ்தரிப்பிடம் வரையில் | | | |
| டிக்கோயா வீதியில் வெஸ்டன் பிரிண்டர்ஸிற்கு முன்னாலிருந்து எம்.ஆர்.எரிபொருள் நிரப்பும் நிலையம் வரையில் | | | |
| இரண்டாம் பிரதான வீதி (நகரசபையினால் அடையாளப்படுத்தப் பட்ட முச்சக்கரவண்டி, வேன் வண்டி நிறுத்துமிடங்கள் தவிர) டன்பார் வீதி (நகரசபையினால் வாகனம் நிறுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட நேரங்களில் மாத்திரமும் நகரசபையினால் அடையாளப்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி, வேன் வண்டி நிறுத்துமிடங்கள் தவிர) | 10,000.00 | 2,000.00 | 35,000.00 |
| மக்கள் வங்கிக்கு முன்னால் புகையிரத நிலையத்துக்கு செல்லும் பாலத்திற்கருகிலிருந்து பொஸ்கோ கல்லூரிக்கு செல்லும் மேம்பாலம் வரை | | | |
| புகையிரத நிலைய வீதி (நகரசபைக்கு அருகிலுள்ள மேம்பாலத்திலிருந்து 100 மீற்றர் வரை (பஸ்வண்டி, லொறி வண்டி தவிர) | | | |

1.ஒவ்வொரு வாகனத்திற்கும் அறவிடக்கூடிய ஆகக்கூடிய கட்டணம்.

| இல. | வாகனம் | கட்டணம் (ஒரு மணித்தியலத்திற்கு) | அதிகரிக்கும் ஒவ்வொரு மணித்தியலத்திற்கும் |
|---|---|---|---|
| 1 | ஒவ்வொரு மோட்டார் கார் அல்லது வேன் வண்டிக்கும் | 80.00 | 60.00 |
| 2 | ஒவ்வொரு பயணிகள் ஊர்தி,லொறி வண்டி, பஸ் வண்டிக்கும் | 150.00 | 50.00 |
| 3 | நகரசபையின் பதிவுசெய்ப்பட்ட முச்சக்கரவண்டி தவிர்ந்த அனைத்து முச்சக்கரவண்டிக்கும் | 60.00 | 50.00 |
| 4 | அனைத்து மோட்டார் சைக்கிளுக்கும் | 50.00 | 40.00 |

04. டன்பார் மைதானத்திலுள்ள கட்டடத்தை உடற்பயிற்சிக்கூடமாக நடாத்திச்செல்வதற்காக 2022 ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு வழங்கல்.

| இடம் | கேள்வி பிணை வைப்பு தொகை (ரூ) | மீளச்செலுத்தப்படாத கேள்வி படிவக்கட்டணம் (ரூ)ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ரூ) |
|---|---|---|---|
| டன்பார் மைதானத்திலுள்ள கட்டடத்தை உடற்பயிற்சிக்கூடத்தை நடாத்திச்செல்வதற்காக குத்தகைக்கு வழங்கல். | 10,000.00 | 2,000.00 | 144,375.00 |

மேலதிக விபரங்களை ஹட்டன் டிக்கோயா நகரசபையின் தலைவர் / செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 0512222275

எஸ்.பாலச்சந்திரன்
தவிசாளர்
அட்டன் டிக்கோயா நகரசபை.

25.11.2022 ஆம் திகதி அட்டன் டிக்கோயா நகரசபைக்காரியாலயத்தில்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் டெஸ்டில் இலங்கைக்கு வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 187 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 386 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 3ஆவது நாள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில் 4ஆவது நாளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி எஞ்சிய ஒரு விக்கெட்டையும் இழந்து 230 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அடுத்து 156 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

திமுத் 83, மெத்தியூஸ் 69 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு 348 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

கடின இலக்கை நோக்கி ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சுழல் தாக்குதலில் சிக்கி 18 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தோல்வியின் பாதைக்கு தள்ளப்பட்டது.

ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கிருமா 18, ஜோஷுவா த சில்வா 15 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்று நடைபெற்ற கடைசி நாளில் விண்டிஸின் கிருமா மட்டும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் போராடிய நிலையில், ஜோசுவா த சில்வா 54 ஓட்டங்களை எடுக்க, ஏனைய வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்தனர். இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் 160 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் இலங்கை அணி 187 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இவ்விரு அணிகளும் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

Powered by
CDB
Your Friend

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

## நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்
# இந்தியா நிதான ஆட்டம்

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் முதல் நாள் முடிவில் இந்திய அணி, 4 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 இருபதுக்கு–20, 2 டெஸ்ட்களில் விளையாடுகிறது நியூஸிலாந்து அணி.

3 ஆட்டங்கள் கொண்ட இருபதுக்கு–20 தொடரை முழுமையாக வென்றது இந்திய அணி.

இந்நிலையில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி தலைவர் ரஹானே, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் மீண்டும் தொடக்க வீரர்களாகக் ஷுப்மன் கில்லும் மயங்க் அகர்வாலும் களமிறங்கினர்.

அதிக ஓட்டங்கள் எடுப்பார் என எதிர்பார்க்கப்பட்ட மயங்க் அகர்வால் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மதிய உணவு இடைவேளையின்போது இந்திய அணி 29 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்களை எடுத்தது.

அதன்பிறகு ஷுப்மன் கில் 52, புஜாரா 26, ரஹானே 35 என வெளியேற முதல் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி, 84 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களை எடுத்தது. ஷ்ரேயஸ் ஐயர் 75, ஜடேஜா 50 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்கள்.

## டெஸ்டிலிருந்து மெஹமதுல்லா ஓய்வு



டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக பங்களாதேஷ் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் மெஹமதுல்லா அறிவித்துள்ளார்.

35 வயதான மெஹமதுல்லா 2007ஆம் ஆண்டு முதல் விளையாடி வருகிறார்.

இதுவரை 200 ஒருநாள் போட்டிகள், 113 இருபதுக்கு–20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 50 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

2009ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமான இவர் தற்போது தனது 12 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

50 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 2914 ஓட்டங்களையும், 43 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். இதில் 5 சதங்கள் மற்றும் 16 அரைச்சதங்கள் அடங்கும்.

## ஆங்கிலக் கால்வாயில் மிதவைப் படகு அனர்த்தம் 27 குடியேற்றவாசிகள் கடலில் மூழ்கி உயிரிழப்பு



ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பிரித்தானியா செல்வதற்கு முயற்சித்த குடியேற்றவாசிகள் சகிதம் பயணித்த படகொன்று கடலில் மூழ்கியதில் 5 பெண்கள் மற்றும் ஒரு சிறுமி உட்பட குறைந்தது 27 பேர் பலியாகியுள்ளனர்.

அவர்கள் பயணித்த மிதவைப் படகில் காற்று வெளியேறியதில் அந்தப் படகில் பயணித்தவர்கள் கடலில் மூழ்கி உயிரிழக்க நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸுக்கும் பிரித்தானியாவிற்குமிடையிலான மேற்படி கடல் பிராந்தியத்தில் இடம்பெற்ற மிக மோசமான படகு அனர்த்தமாக இது கருதப்படுகிறது.

இந்தப் படகு அனர்த்தத்தில் 31 பேர் உயிரிழந்ததாக பிரான்ஸ் அதிகாரிகள் ஆரம்பத்தில் தெரிவித்திருந்த நிலையில், பின்னர் அத்தொகை 27 ஆக குறைக்கப்பட்டது. இந்நிலையில் மீட்பு நடவடிக்கையில் பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவைச் சேர்ந்த குறைந்தது 3 படகுகளும் 2 உலங்குவானூர்திகளும் பங்கேற்றன.

மேற்படி படகு அனர்த்தத்துடன் தொடர்புபட்ட 4 சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சு தெரிவிக்கிறது. இந்நிலையில் இந்தப் படகு அனர்த்தம் குறித்து பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

உலகச் செய்திகள்

## ரஷ்யாவில் நிலக்கரி சுரங்கத்தில் வெடிப்பு



ரஷ்யாவில் சைபீரியா பிராந்தியத்தில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தையடுத்து அந்த சுரங்கத்தில் 820 அடி ஆழமான அடித்தளத்தில் சிக்கியுள்ள சுமார் 75 சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தையடுத்து 23 வயது சுரங்கத் தொழிலாளர் ஒருவர் சடலமாகவும் 40 சுரங்கத் தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும் மீட்கப்பட்டுள்ளனர்.

## தடுப்பூசி மருந்தால் கொவிட்-19 தொற்று முடிவுக்கு வந்துள்ளதாக கருதுவது தவறு

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி மருந்துகள் அந்த வைரஸ் தொற்றுப் பரவுவதை சுமார் 40 சதவீதத்தால் குறைப்பதாக தெரிவித்த உலக சுகாதார ஸ்தாபனம், தடுப்பூசி மருந்து ஏற்றிக்கொண்டுள்ளவர்கள் தாம் ஏனைய எந்தவொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை எனத் தவறாகக் கருதுவது குறித்து எச்சரித்துள்ளது.

முழுமையாக தடுப்பூசி மருந்து ஏற்றிக்கொண்டுள்ளவர்கள் தாம் அந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகி அந்தத் தொற்றை ஏனையவர்களுக்குப் பரப்புவதைத் தவிர்க்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ரெட்ரொஸ் அதானொம் கப்பிறியேஸஸ் வலியுறுத்தினார்.

தடுப்பூசி மருந்துகள் கொவிட்-19 கொரோனா தொற்றை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தடுப்பூசி ஏற்றியவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை எனவும் தவறான கருத்துகள் நிலவுவது குறித்துத் தாம் கவலையடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸின் டெல்ற்றா வகை வைரஸ் தொற்றுப் பரவ ஆரம்பிப்பதற்கு முன்னர் தடுப்பூசி மருந்துகள் தொற்றுப் பரவுவதை சுமார் 60 சதவீதத்தால் குறைத்ததாகவும் ஆனால் அந்த வைரஸ் பரவ ஆரம்பித்ததற்குப் பின்னர் தடுப்பூசி மருந்துகள் வைரஸ் தொற்று பரவுவதை 40 சதவீதத்தால் மட்டுமே குறைந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.



மங்கள சமரவீர

காலஞ்சென்ற மகாநாமா மற்றும் கேமாவின் மகனும்,
காலஞ்சென்ற ஜெய்மினி மற்றும் ஜயந்தியின் சகோதரரும்,
நிமல் குணவர்தனவின் மைத்துனரும் மற்றும் யேசாந்த்,
சுனிமாலி மற்றும் சஞ்சலாவின் மாமானாரும் ஆவார்.
அன்னார் 2021 ஆகஸ்ட் 24 அன்று காலமானார்.

**அன்னாரது அஸ்தியானது 26 நவம்பர் 2021 அன்று மாலை 4.30 மணிக்கு மாத்தறை மயானத்தில் அமைந்துள்ள குடும்ப கல்லறையில் அடக்கம் செய்யப்படும்.**

## சொலமன் தீவுகளில் தொடர்ந்து இரண்டாவது நாளாக கலவரம்; அரசாங்கக் கட்டிடங்களுக்குத் தீ வைப்பு



சொலமன் தீவுகளில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று வியாழக்கிழமை கலவரம் இடம்பெற்ற நிலையில் அவுஸ்திரேலியாவானது அந்நாட்டுக்குத் தனது அமைதி காக்கும் படையினரை அனுப்பி வைத்துள்ளது.

பசுபிக் பிராந்திய நாடான சொலமன் தீவுகளில் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பைப் பேண பொலிஸாரையும் இராணுவத்தையும் ஈடுபடுத்தியுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிஸன் தெரிவித்தார். அந்நாட்டுப் பிரதமரை ஆட்சி கவிழ்க்கும் முகமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததையடுத்து கலவரம் ஆரம்பமானது.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கலவரத்தின் போது அந்நாட்டில் பதற்றநிலையைக் கட்டுப்படுத்த அமுல்படுத்தப்பட்டுள்ள 36 மணி நேர ஊரடங்கு சட்டத்தையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் அரசாங்கக் கட்டிடங்கள் பல தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் சொலமன் தீவு பிரதமர் மனாஸ் சோகவாரின் வேண்டுகோளின் பிரகாரம் சமாதானப் படையினரை அந்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக ஸ்கொட் மொரிஸன் கூறினார்.

## சோமாலிய தலைநகரில் கார் குண்டு தாக்குதல்; 5 பேர் பலி; 23 பேர் காயம்



சோமாலிய தலைநகர் மொகாடிஷுவில் பாடசாலையொன்றுக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 5 பேர் பலியானதுடன் 11 பாடசாலைச் சிறுவர்கள் உட்பட 23 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பிராந்தியத்தில் வானளாவ புகைமூட்டம் எழுந்ததுடன் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்ததாக பிராந்திய அம்புலன்ஸ் சேவை தெரிவிக்கிறது.

இந்த வெடிப்பு சம்பவத்தால் அருகிலுள்ள பாடசாலைக் கட்டிடத்தின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதுடன் வாகனங்கள் பலவும் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

அத்துடன் அந்தப் பிராந்தியத்திலுள்ள மருத்துவமனைக் கட்டிடமொன்றுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு அந்நாட்டு ஆயுதக் குழுவான அல் ஷபாப் உரிமைகோரியுள்ளது. ஐக்கிய நாடுகள் வாகனத் தொடரணியொன்றை இலக்குவைத்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அந்தக் குழுவின் பேச்சாளர் அப்டியாஸிஸ் அபூ முஸாப் தெரிவித்தார்.

## சுவீடனின் முதலாவது பெண் பிரதமராக நியமனம் பெற்றவர் இராஜினாமா



சுவீடனின் முதலாவது பெண் பிரதமராக நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்டலெனா அன்டர்ஸன் அந்தப் பதவிக்கு நியமனம் பெற்று சில மணி நேரத்தில் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து கனிஷ்ட கிறீன் கட்சி விலகியமை மற்றும் அவரது வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சி தோல்வியைத் தழுவியமை என்பவற்றையடுத்து அவர் பதவி விலகியுள்ளார். பொருளியலாளரான மக்டலெனா (54 வயது) கடந்த 7 வருட காலமாக நிதி அமைச்சராக சேவையாற்றியிருந்தார். கூட்டமைப்பு அரசாங்கமானது அதில் அங்கத்துவம் வகிக்கும் ஒரு கட்சி விலகும் போது பதவி விலக வேண்டும் என்பது அரசியல் அமைப்பு ரீதியான நடைமுறை எனவும் அந்த வகையில் சட்டபூர்வமான அந்தஸ்து கேள்விக்குறியாகிய மாறியிருக்கும் அரசாங்கமொன்றுக்குத் தலைமை தாங்க தான் விரும்பவில்லை எனவும் மக்டலெனா தெரிவித்துள்ளார்.

கிறீன் கட்சியானது முதல் தடவையாக தீவிர வலதுசாரிக் கட்சியுடன் இணைந்து முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தே கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளது. இந்நிலையில் பாராளுமன்ற சபாநாயகர் அடுத்த கட்ட நகர்வு குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Friday, November 26, 2021